சரசுவதி மகால் வெளியீடு எண். 124.

செண்டலங்காரன்

விறலிவிடு தூது

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

1990 விலை ரூ. 8-00

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு எண். 124.

செண்டலங்காரன்

விறலிவிடு தூது

*

பதிப்பாசிரியர்:

கல்வெட்டுக் கலைஞர்

தமிழக வரலாற்று அறிஞர், கல்வியாளர்

கரந்தைப் பேராசிரியர் சி. கோவிந்தராசனார்,

தமிழியல் புலம்,

மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

வெளியிடுபவர்:

இயக்குநர்,

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

*

1990 [விலை ரூ. **8—00**

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	...	Sendalangaran Viralividu Thuthu
Editor	...	Prof. C, Govidndarasanar
Publisher	...	Director; Sarasvati Mahal Library
Publication No.	...	124
Language	...	Tamil
Edition	...	II Edition
Date of Publication	...	Nov. 1990
Paper used	...	14·2 Kg. Seshasayee
Size of the Book	...	21 × 14 cm.
Printing Type used	...	12 pt.
Number of pages	...	58
No. of copies	...	1000
Price	...	Rs. 8/-. (Rupees Eight only)
Printer	...	Sarasvati Mahal Library Press
Binding	...	Card Board
Subject	...	Literature

PREFACE

'Thoothu' is a special type of literary composition in Tamil in which author conveys a message through an appropriate messenger to the object of his love or adoration and embellishes the central idea with all literary devices. Virali Vidu Thoothu is a variety of this poetic genre, often couched in popular and sometimes colloquial language. In the work now published. an annonymous poet conveys his tribute to his generous patron Sendalangaran, who is understood to have been an accountant of the Government (Attavanai) in Mannargadi in Tanjore District, under the reign of King Shahaji of Maratta dynastry who ruled between the years 1684 and 1710 A. D. The author ingeniously interweaves the glory of the hero of the poem, Sendalangaran, with a message of love sent by one Vahu Bhatta of Nagapattinam to his wife through 'Virali' a wandering ministrel who is an expert in dancing.

The present work is based on a palm-leaf manuscript in the T. M. S. S. M. Library bearing No. M. 96/283. Although the literary worth of the poem may not be of a very high order, it is a useful record of the state of society in Tamil Nadu, where even as late as the 17th and 18th centuries A. D., the age of the great donors and

patrons of Tamil Literature had not faded away and where not only great sovereigns. but also men of the rank of Sendalangaran held it as a matter of dignity to help and honour the Tamil poets.

Our thanks are due to Thiru C. Govindarasanar. Professor; Pulavar Kalloori. Karanthai. for his having edited this work in an able and schollarly manner and to the Proprietor, Vetrivel Press, Thanjavur for his neat execution.

Our thanks are always due in an abundant measure to the Government of Tamil Nadu for their generous publication grant. but for which many books preserved in this library would not be available to the public.

Thanjavur,
30—1—69.

N. KANDASWAMY,
HONORARY SECRETARY,

முகவுரை

தூது என்பது தமிழ் மொழிக்குரிய பலவகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகும். புலவர்கள் தத்தமது புலமைத் திறத்துக்கு ஏற்றவாறு கருத்துக்களைத் தொடர்புபெற அமைத்து, தாம் விரும்பும் தெய்வங்களிடத்தும், வள்ளல் களிடத்தும் பாணன், விறலி போன்றோருடன்; கிளி, வண்டு, தென்றல் போன்றவற்றையும் தூதுவிடும் பாங்கில் தூதாகும் பிரபந்தங்களைப் பாடியுள்ளனர். சொல்லும் பொருளும் துலங்க உவமை, சிலேடை நயங்களுடன் தூது செய்யப்பெறுதல் மரபாகும். இத் தூதும் அம் முறையி லேயே பாட்டுடைத் தலைவனான செண்டலங்காரன் என்னும் வள்ளலைப் புகழும் பாங்கில், ஆடலில் வல்லாளா கிய விறலியைத் தன்னிடம் ஊடல் கொண்ட மனையா ளிடத்து, வாகுபட்டனென்னும் அந்தணன் தூதுவிடும் பாங்கில் அமைக்கப்பட்டதாகும். தனித்தனியே உள்ள பல்வேறுபட்ட செய்திகளையுடைய செய்யுட்களாலாகிய தொகுதி போலன்றித் தொடர்ந்த பல கருத்துக்களின் கோர்வையாக ஒரே நெடும் பாட்டால் இயற்றப்பெறுவது தூதாகலின், இதனைத் தொடர்நிலைச் செய்யுளாகக் கலி வெண்பாவால் இயற்றப் பெறுதல் மரபாகும்.

செண்டலங்காரன் என்னும் பெயரையுடைய வள்ளல் மீது தாம் வைத்த மதிப்பினை, நன்றியறிதலாகப் புகழ்ந்து நிலைநிறுத்தும் விருப்புடன், ஆசிரியர் இந்நூலினைச் செய்துள்ளார். நூலாசிரியர் இன்னாரென்பதை அறிய வியலவில்லை. சரசுவதி மகாலிலுள்ள இந்தச் சுவடியின் இயல்பு மூலச்சுவடியல்ல வென்பதைக் காட்டுதலின் பிரதி யாகவே அமையும். இச்சுவடியின் இறுதியில் 'ஆறுமுகம்' என்னும் கையொப்பம் காணப்படுதலின், மூலச்சுவடியி னைக் கண்டு பிரதிசெய்த தமிழறிஞர் 'ஆறுமுகம்' என்னும் பெயருடையாரென்பது புலனாகின்றது.

இந் நூலில் புகழப்பெறும் செண்டலங்காரன் என்னும் வள்ளல், தஞ்சை சகசி அரசருக்குரிய கிராம மணியத்து அட்டவணை அதிகாரியாக இருந்தானென்பதை 544, 545ம் கண்ணிகள் விளக்குகின்றன. தஞ்சையில் மராட்டிய மன்னர் மரபில் சகசி மன்னர் ஆட்சி செய்த காலம் கி. பி. 1634 முதல் 1714 வரையிலாகும். இதனால் இந்நூலாசிரியர் இற்றைக்கு இருநூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர் சோழ நாட்டில் வாழ்ந்த புலவராவர் என்பது தெளிவாகும்.

விஞ்ஞான விளைவுகளில் விழைவுகொண்டு, வேகமாக நாகரிகமெனும் காலல்தேரில் உழன்று வரும் இக்காலத்தில் பழமையான இத்தகைய சிற்றிலக்கியங்களை வெளியிடுத லாலுண்டாகும் பயன் என்னவென்று சிலர் எண்ணக்கூடும்.

ஒரு பழைய தமிழ் இலக்கியத்தினால், அதனை இயற்றிய புலவரின் மொழியறிவும், அவரால் மதிக்கப்பெற்ற செல்வர்கள், மன்னர்கள் ஆகியோருடைய இயல்பும், அவர்கள் வாழ்ந்த காலப்போக்கும், அக்காலத்திலிருந்த தெய்வ வழிபாடு, ஆட்சிமுறை, முதலியனவும், அக்கால மக்களின் ஒழுக்க பழக்க வழக்கங்கள், செயற்கரிய செயல்கள் ஆகிய வரலாற்றுப் பகுதிகளாகும் சான்றுகள் பலவும் கிடைக்கின்றன. விறலிவிடு தூதாகும் இந்நூலில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ள பகுதிகளில் ஒன்று, பரத்தை மகளாகிய சித்திரவல்லியை விரும்பிச்சென்ற வாகுபட்டனெனும் அந்தணன் அவர்களின் பொய் முயக்கத்தில் சிக்கிப் பொன்னிழந்து நிலை தளர்ந்து, நாடோடியாக வெளியேற்றப் பட்டுத் திரிந்ததனை உருக்கமாக விளக்கிக் கூறுதலின்; இதனைப் போன்ற நூல்களைப் பயின்றார். இத்தகைய அறிவுரையாகும் அனுபவங்களைக்கண்டு, வாழ்வில் திருத்தமடைந்து நல்வழிப்படுதலும் இதனாலுண்டாகும் பயனாகுமன்றோ!

செண்டலங்கார வள்ளல் வரலாறு

செண்டலங்காரன் என்னும் வள்ளல், தஞ்சை மாவட்டத்திலுள்ள இராசமன்னார்குடி என்னும் நகரில் வாழ்ந்தவனாவான். இதனை, 'வண்டுவரை தன்னில் வருவோன்', 'சீராசை திகழ் செண்டலங்காரன்' என்னும் தொடர்களால் காணலாகும்.

மன்னார்குடி என்ற வைணவத் தலத்திற்கு, மன்னார்கோயில், இராசமன்னார்குடி, வண்துவராபதி, தக்கணதுவாரகை என்னும் பெயர்கள் வழங்கப்பெற்றுள்ளன வென்பதை, தக்கண துவாரகா மகாத்மியம், ஸ்ரீரங்கபுராணம், திருப்பதி புராணம் முதலிய நூல்களில் காணலாகும். இத்தலத்தில் எழுந்தருளியுள்ள இராசகோபாலப் பெருமாள் திருக்கோயிலிலுள்ள கல்வெட்டுகள், இவ்வூர் "குலோத்துங்கசோழ விண்ணகரம்" "ராஜாதிராஜ சதுர்வேதிமங்கலம்" "சோழ விண்ணகரம்" என்னும் பெயர்களுடன் திகழ்ந்திருத்தலைப் புலப்படுத்துகின்றன.

இத்தலத்திற்குரிய திருமால், ஸ்ரீ இராசகோபாலப் பெருமாள் என்னும் திருநாமம் பெற்றிருப்பது வழக்காயினும், "இராசகோபாலன் கட்டியம்" என்னும் பழைய தமிழ் நாடக நூலுள் செண்பகவல்லி மன்னன், செண்டலங்கார மன்னன், வண்துவராபதி மன்னன், தென்ராசை மன்னன், என்றெல்லாம் கூறப்பெற்றிருப்பதுடன், முதற் குலோத்துங்கன் காலத்தில் 'வண்துவராபதி மன்னனார்' என்றும், மூன்றாம் இராசேந்திரசோழன் காலத்தில்

துவராபதி மன்னனார்' என்றும், திருமலை நாயக்கர், காலத்து ஸ்ரீரங்கராசனுடைய சாசனத்தில் 'வண் துவராபதி மன்னனார்' என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன. இராச மன்னார்குடி, தக்கண துவாரகை என்னும் பெயர்கள் முறையே இராசை, துவரை என்னும் மரூஉப் பெயர்களால் வழங்கப் பெற்றுள்ளன.

இதனால், இந்நூலுள் கூறப்பெறும் பல சொற்களுக்கும் பகுதிகட்கும் விளக்கங் காண்பதுடன் இராசமன்னார்குடிப் பெருமானுக்குரிய திருநாமங்களுள் ஒன்றாகிய 'செண்டலங்காரன்' என்னும் சிறப்புப் பெயருடன் பாட்டுடைத் தலைவன் விளங்கியிருந்தலை அறியலாகும். இவ் வள்ளல் 'நந்தகோபன் குலத்துதித்த கோபாலன்' என்று கூறப்பெற்றிருப்பதால் இவன் யாதவ மரபினன் என்பது தெளிவுறும். தஞ்சையை ஆண்ட சகசி மன்னருக்குரிய இராசமன்னார்குடி வட்ட கிராம அதிகாரமுடைய மணியத்துடன், இறை, வரி, கடமை, குடிக்கூலி, வாசல், சுங்கம், சுதந்திரம், மாவடை, மரவடை என்னும் எட்டு வரிகளுக்கும் உரிய (அஷ்டவணை) மணிய அட்டவணையாக இருந்தானென்பதை நூல் நன்கு விளக்குகின்றது. இவ் வள்ளல் மந்திர வித்தைகளுடன், வீரமும், ஈகையும் தமிழ்ப் புலவர்களைப் போற்றிப் பரிசுகள் பல நல்கும் பண்பும் உடையவனென்பதுடன், திருமால் வழிபாட்டில் சிறந்திருந்தானென்பதை நூலாசிரியர் விளக்கமாகச் சொல் நயங்களுடன் புலப்படுத்தியுள்ளார்.

செண்டலங்கார வள்ளல், மன்னப்பன் என்னும் பெயருடையாரின் பெயரன் தியாகப்பனின் மகனாகப் பிறந்தவன். மகாராட்டிர அரச குலத்தாராலும், சான்றோர்களாலும் உறவின் முறையோடு மதித்துப் பழகும் மேன்மையுடையவனாகத் திகழ்ந்திருந்தானென்பதை நூலுள் நன்கு அறியலாகும். இவ்வள்ளலின் காலம் தஞ்சை சகசி மன்னரின் காலமேயாகும்.

தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலையச் சுருவூலத்து மூலச் சுவடியில் சொற்பிழைகள் பலவாக இருப்பதுடன் கையெழுத்துப் பிரதியிலும் காணப்பட்ட பிழைகள் பலவாகும். இயன்ற அளவில் இலக்கணவியல்புக்கு விலக்கில்லாயல் உள்ள சொற்களைக்கொண்டே நூலினைச் செப்பஞ் செய்துள்ளேன். இத்தகைய சிறந்த தமிழ்ப் பணியினை எனக்களித்த தஞ்சை, சரசுவதி மகால் நூல்நிலையச் செயலாளர் அவர்கட்கும் நிர்வாகத்தினருக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தஞ்சை
25—1—69.

தங்களன்புள்ள,
சி. கோவிந்தராசனார்,

* *
* *
*
*

AN APPEAL

Manuscripts on Palm Leaf or Paper of the ancient works of the wise men of the past, are the great treasures, solely inherited by the Nation and it is the moral obligation of persons who possess them to preserve them safely for the future generations of mankind.

Probably you have some of these in your possession or you know friends or neighbours who possess them. You can make a great contribution to the cause of the preservation not only of our National Culture but also to the Culture of Humanity as a whole by arranging to present such manuscripts to the famous T. M. S. S. M. Library, Thanjavur.

The manuscripts so presented will be accepted and acknowledged with pleasure and gratitude by the authorities of the Library, preserved with meticulous care and made available to successive generations of readers and scholars for study and research. The hitherto unpublished works found among them, will be printed and published in due course, as facilities occur, with the expression of the Library's gratitude for your gift.

The great Scholar-King of Tanjore, Rajah Serfoji, has attained immortal fame by dedicating enormous time and wealth to the expansion and firm establishment of this world-famous 'Sarasvati Mahal Library.' It is open to you to share the honour of Serfoji, in your own measure by contributing your manuscripts to the great institution built by him.

This great Honour is beckoning to you to accept it. Will you hasten to take it up? The Library waits for your answer.

DIRECTOR,
Sarasvati Mahal Library, Thanjavur.

நாலாவது நாகப்பட்டினம் வாசுபட்டன் கதை

நாகப்பட்டினத்தில், வாசுபட்டன் என்ற வேதியன் வாழ்ந்திருந்தான். அவன் அத்தை மகளை மணந்திருந்த துடன் அபரஞ்சி என்னும் அழகியினையும் இளையாளாக மணந்து இருவர்க்கும் தனித்தனியே இரண்டு மனைக ளமைத்து அங்குமிங்கும் நாளொருநாள் இருந்து இன்புற் றிருந்தான். ஒரு நாள் இளைய மனைவி அபரஞ்சியின் வாசலில் வாசுபட்டன் வெளிறிய முகத்துடன் நின்றிருந் தான். அதுபோது உடலழகோடு இசையிலும் ஆடலிலும் வல்லவளாகிய விறலியொருத்தி அவன் நிலைமையைக்கண்டு வினவினாள். பட்டனும் விறலியிடம் தான் உற்ற துன்பத் திற்குக் காரணமான நிகழ்ச்சிகளைக் கூறுவானாயினான்.

"என் இளைய மனைவி அபரஞ்சியோடு ஒருநாள் யான் முயங்குங்கால் சிந்தை பேதித்துப் பெருமூச்செறிந் தேன். அதனைக்கண்ட அவள் என்னிடம் ஊடல்கொண்டு பின்னர் முயங்க மறுத்துவிட்டாள்; பலவாறு யான் அவளை இரந்தும் பயனில்லை. மனம் குழம்பிய யான் கங்கை நதி யில் நீராடி தவம் முதலியன செய்துவர சிந்தித்துப் புறப் பட்டேன். தென்கமலை என்னும் திருவாரூரில் சிவனார் தம் சன்னிதியில் சித்திரவல்லியென்னும் அழகின் மிகுந்த தேவரடியாளைக் கண்டேன், காமுற்றேன். அவள் பொழி லில் நெஞ்சம் கட்டுண்டது. அவளை நாடிச் சென்றேன். வேண்டிய பொன்னுடன் சென்ற என்னைப் புகழ்ந்து பூரிப்புடன் வரவேற்றாள் தாய்க்கிழவி. சித்திரவல்லி யோடு பலநாட்கள் கூடி மகிழ்ந்தேன். என்னிடமிருந்த பொன்னாணயங்களை யெல்லாம் வஞ்சகம் நிறைந்த சாகசங்களால் சித்திரவல்லியும் அவள் தோழியரும் தாய்க்கிழவியும் பறித்து விட்டார்கள். கையில் பொருளில்லாத என் நிலையை அறித்த தாய்க்கிழவி

என்னை வீட்டை விட்டு வெளியேற்றுர் செயல்களை மேற் கொண்டாள். செலவினங்கள் பலவற்றைச் செய்யச் செய்தாள், பல ஆயிரம் பொன் நாணயங்களை படிப்படியாகக் கொடுத்து இழந்த என்னால் என்ன செய்வதென்றே தெரிய வில்லை. இந்நிலையில், தாய்க்கிழவி என்னை அவமதித்து இகழ்ச்சியாகப் பேசத் தொடங்கினாள். சினங்கொண்ட யான் சீறி எழுந்தேன். என்ன பயன்? தாய்க்கிழவி நீதி மன்றத்தாரிடம் மாயம் பேசி வழக்கு செய்தாள்: அறம் கூறும் அம்பலத்தார்கள் என்னிலைக்கு இரங்கி எனக்கு அறவுரை கூறி அனுப்பினார்கள். நிலைமாறி உள்ளம் நைந்திருந்த யான் வேசியால் விளைந்த வினைதீர தீர்த்த யாத்திரையை மேற்கொண்டேன். தெய்வத் தலங்களுக்குச் சென்று வழிபட்டேன். புண்ணிய தீர்த்தங்களில் நீராடி னேன். ஊர் திரும்பும்போது தென்துவரை என்னும் மன்னார்குடி நகரில் வள்ளலாம் செண்டலங்காரப் பிரபுவைக் கண்டேன். காசி தீர்த்தம் வழங்கி ஆசியும் செய்தேன். வழங்கிக் கை சிவந்த செண்டலங் காரன் பரிசுகள் பல எனக்கு வழங்கினான். மகிழ்வுடன் பெற்றுவந்த யான் மங்கை இளையாளைக் காணத் துடிக் கின்றேன். அவளோ என்மீது ஊடல் கொண்டுள்ளாள். எனவே; விறலியே! என்பொருட்டு என் இளைய மனைவி அபரஞ்சியிடம் தூது சென்று எனக்கு ஆதரவு செய்தல் வேண்டும்'' என்றான்.

தூது சென்ற விறலி, பட்டரின் இளையாளை நாடி உற்றதுரைத்தாள். அப்பொழுது மனைவியர் இருவருமே இணைந்து வந்து வாகுபட்டரை மகிழ்வுடன் ஏற்றதுடன், விறலிக்குப் பரிசுகள் பல வழங்கி பட்டருடன் இன்புற்று இனிதே வாழ்ந்திருந்தனர்.

உ

செண்டலங்காரன்

விறலி விடு தூது

காப்புரை

நேரிசை வெண்பா

அத்த ரருள்செண் டலங்கார னானபரி
சுத்தன் விறலிவிடு தூதுக்கு— நித்தநித்தம்
பொற்பகத்தென் ராசை புனிதர்கை லாசரருள்
கற்பகத்தின் மெய்ப்பதமே காப்பு.

நூல்

1. பாட்டுடைத்தலைவன் செண்டலங்காரனின் சிறப்பியல்புகள்.

சீர்கொண்ட செம்பதுமச் செல்வி மணவாளன்
கார்கொண்ட மேனிக் கருணைமால்—ஏர்கொண்ட
செண்டழகன் பேரழகன் செய்யதனிச் சேவையுள 2
தண்டழகன் செண்பகப்பூந் தாரழகன்— [1]வண்டுவரை
தன்னில் வருவோன் தனிமாலைத் தாரழகன் 3
பொன்னி லழகன் புகழழகன்—செந்நெலார்
சீராசை வாழுந் திகழ்செண் டலங்காரன்
தாராசை கொண்ட தடம்புயத்தான்—பாருலகில்
முன்னிலும் பின்னழகன் [2]முச்சகமு முண்டுமிழ்ந்த 5

---

1. வளமை நிறைந்த தக்கண துவாரகை. இந்நகர் இராச மன்னார்குடியாகும். இதன் மரூஉப் பெயர் — துவரை என்பதாம்.
2. திருமால்.

மன்னன் பதத்தை மறவாமல் — உன்னியுன்னி
யெட்டெழுத்து போதியிசைந்ததிரு வாய்மொழியின் 6
கட்டுரையைப் பேசிக் கனிந்திடுவோன் — துட்டர்
கொட்டந் தன்னை யடக்குஞ் சதுரன் 7
பொன்னை யடக்கிப் புதையாதான் — கன்னனைப்போல்
கோரக் கொடுக்குந் திகழுந் தளிர்க்கரத்தான் 8
பாடிக் கொடுக்கவரும் பாவலரை — நாடிவழி
பார்த்துமிக நிற்குமொரு வள்ளலிரப் போர்விழி 9
பார்த்து வழங்கும் விதுரன் — அழியாத
சந்ததியாய் வந்த தருமன் தகப்பன்பேர் 10
பிந்திவர முன்பேரைப் பெற்றிடுவோன் — விந்தைபெறு
நூபன் வரையாய்ப் பாடிப் புகழ்ந்த 11
கோபன் குலத்துதித்த கோபாலன் — நீபமணி
சுத்தச வெளவ சுசிர்தன் சுசசரணன் 12
சித்தப்பே ளாகுஞ் செசநாதன் — கொத்துமலர்த்
தாரெடுத்த தோளான் சகமான பொய்யுரைசொன் 13
னாரிடத்துஞ் சொல்லா அரிச்சந்திரன் — மேருமலை
சிங்கந் துருவத் திரிகூ டங்கடாரம் 14
நங்கையர் மெச்சும் அனபாயன் — இங்கிதவேள்
காரி மலையன் கனபோசன் நள்ளிமுதற் 15
பாரி யெழிலியெனும் பண்பினான் — ஓதரிய
பண்ணான் நற் புண்ணியங்கள் பண்ணுவான் பற்றலரை 16
யெண்ணான் படித்தவரை யெண்ணுவான் — தண்மலர்ப்பூந்
தாரவர் கட்குத் தருவான் குறுகலரைச் 17
சேரா னுயர்ந்தவரைச் சேருவான் — ஆருமெதிர்
கொள்ளான் பகைந்தமிழைக் கொள்ளுவான் பாவலரைத் 18
தள்ளான் பிழைகண்டாற் றள்ளுவான் — கள்ளர்
புறங்கண்டான் காணான் தரித்திரத்தைக் கண்ணை 19

வடிக்குஞ் செயங்கொண்டா னற்பரொடு—வண்டர்முன்
நில்லான் குருமநெறி நிற்பா னெவரிடத்தும் 20
செல்லான் புலவர்பின் செல்லுவான்—வல்லினை
வந்தாலும் வாலிமுன்ன ரான செழுங்கருணைத்
தந்தான் கொடியருக்குத் தாரா தான்—முந்துலகிற்

2. மந்திர வித்தைகளறிந்த சிறப்பு

பில்லி குறளி பெருங்குட்டிச் சாத்தியொடு 22
கொல்லி மிருகன் கொடுவீரன் வல்லபமாங்
காட்டேறி பொல்லாக் கழுவேறி சண்டியொடு 23
பூட்டேறி முன்னோடி பூதகணம்—நரட்டிலுள்ள
பள்ளிப்பே யாடுர் பறைப்பேய் துலுக்கப்பேய் 24
கொள்ளிப்பேய் தேவங் குடியிற்பேய்—கள்ளப்பேய்
மொட்டைப்பேய் மெத்த முருட்டுப்பேய் வெட்டுணிக் 25
கட்டைப்பே யோட்டற் கறட்டுப்பேய்—நெட்டைப்பேய்
புள்ளூற்றுப் பேயெங்கும் போகாத பேய்முனிகள் 26
உள்ளூரி லோடி யொதுங்கும்பே—யுள்ளதெல்லாஞ்
[1] செண்டலங் காரனெனச் செப்பினா லெப்பொழுதுங் 27
கொண்டலங் காரமொடு கும்பிட்டுத்—தெண்டனிட்டுச்
சக்கரவா ளக்கிரியைத் தாண்டிவிழுந் தோடிவிடும் 28
விக்கிரமா தித்தனென்னு மேன்மையான்—தக்கதொரு
கட்சமாலங் கருடனெந்திர மந்திரமா 29
ரட்சைகள் கட்டும் ரகசியமும்—லெட்சுமிதன்
சக்ர விதியலும சக்ரம் புவனேசி 30
சக்ர நவகோணச் சக்ரமொடு—மிக்காமுச்
சாடக் கணபதியுஞ் சாத்தானின் மந்திரமும் 31
அட்ட வயிரவர்தம் அங்கிதமுஞ்—துட்டபத்ர

---

1. இராசமன்னார்குடியில் எழுந்தருளியுள்ள இராசகோபாலப் பெருமானுக்குரிய சிறப்புப் பெயர்களுள் ஒன்று.

காளி செபமுங் கனதுற்கை யெந்திரமும் 32
கூளி நவசக்திக் கொள்கைகளும்—நாளதுநாள்
மோகன தம்பனமு முச்சாட னங்களுடன் 33
ஆகிரிஷ ணங்களையும் ஆய்ந்தறிவோன்—மோகவெம்மா

3. மாவை மறவாது அடியாரை மதித்தல்.

மாலை யடித்தான்பின் மாலைவ ளர்த்தான்பின் 34
மாலைத் திருட மனம்பொறுத்தான்—மாலைக்
கனவில் மறவொன் கனிவான கவியால் 35
நனவிற் புகலுவான் நம்பித்—தினமுந்
துதிப்பான் பரிகரிப்பான் தோத்திரங்கள் பண்ணி 36
மதிப்பா னடியவரை வாழ்த்திப்—பதித்திடுவான்
தூயன் செயவீர துங்கன் பெறுவச்ர 37
காயன் துரைராச காங்கேயன்—மாயன்
கலையை யெடுத்துக் கருங்குந்தி லேற 38
மலையை யெடுப்பித்த வள்ளல்—பலகாலும்

4. மரபுப் புகழ்ச்சியியல்

மலை

ஆறு மலையு மலைகட ந்து வேங்கடத்தில் 39
நூறு மலை யேறினா னோகாமல்—சீறுபுலி
சந்த மகிலுந் தழுவுசொல்லி மாமலையும் 40
விந்த மலையுமுள்ள வேல்வேந்த—னுந்துதிரைத்

யாறு

தள்ளித் தாளந் தமனியங்கோ மேதகமு 41
மெள்ளக் கொழித்து விசிறியே—அள்ளலிடுங்
கன்னிநதி கோன்கங்கை தாம்பி ரவதணி 42
யன்னதியாங் காவேரி யாற்றினான்—துன்னுபுகழ்ச்

நாடு

சேணாடு போலத் திகழ்ந்து விளைந்தவயற் 43
சோணாடுடைய சுகுமாரன்—கோணாத

ஊர்

சத்த தலமுந் தடமதிலுங் கோபுரமும் 44
பத்திபத்தி யான பலகணியுங்—கொத்துமலர்ச்
சோலையுங் காய்த்தகறித் தோட்டமுஞ் செய்யகருப் 45
பாலையும் ஆலயமும் அம்பலமுஞ்—சாலைகளும்
மண்டபமுந் தீர்த்த வசதியுஞ் சாவடியும் 46
புண்டரிக வாவிகளும் பூம்புனலும்—மண்டலிகர்
தங்க ளரண்மனையுஞ் சத்திரமுந் திண்ணைகளும் 47
மங்கைநல்லார் வீதிகளும் வண்மைகளுந்—தங்கக்
கடையுங் கடைத்தெருவுங் கம்பமுங் கொற்றக் 48
குடையுங் கொடியுங் குமிறுங்—கடகளிறுஞ்
செண்டழகர் சன்னிதியுஞ் சேர்ந்து வளம் பொருந்து 49
வண்டுவரை ராசை வளப்பதியான்—சண்டை செய்

கரி

உன்னு முழமே முயருமுரற் காற்கரிமுன் 50
துன்னிமுலைப் பாயுந் தறுகண்மையால்—மன்னுமிசைக்
காற்றி லெதிர்க்குங் கறங்கெனவே சுற்றி நின்று 51
மாற்றலரைக் கொல்லு மதமீறி—கூற்றமென
நீண்ட மறைக்கோட்டு நெட்டூர வாரணம்கை 52
தாண்டப் பெறாத துதிக்கையால்—பூண்டதொரு
கும்பத் தடவிகடங் கொண்டசண்ட வேகமிகு 53
கம்பக் கரடக் களிற்றினர்ன்—வெம்பகைஞர்

பரி

தானைத் துணை யைத் தலையைக் குருதிக்கத் 54
தோனைத் துகைக்குந் துரகதத்தான்—வாள்வயவர்

கொடி

அற்றப் புறமோட ஆர்ப்பரித்து வெற்றிகொளும் 55
கொற்றக் கருடக் கொடியிலான்—மற்றுலகி

முரசு

வெம்முரசு மிம்முரசே போற்றா தெனப்புகல 56
மும்முரசு நின்றதிரு முன்றிலான்—கம்மெனவே

மாலை

கொண்டுலவு வாகை குராதுளப பார்வெறி 57
வண்டுலவு முல்லைமலர் மாலையான்—மண்டலிகன்

5. தாதையும் தந்தையும்

ஆலைமதன் நூல் மழகியமன் னப்பனருள் 58
பாலன் சதுரன் பரிபாகி—லீலைமதன்
செய்யநா ராயணனுஞ் செண்பகப்பூ பாலகனுந் 59
துய்ய துணையெனவே தோன்றினோன்—செய்யமுன்னூல்
பூணு மணிமார்பன் புகழ்நல் லப்பன், 60
ஆணை மறவாத அன்பினான்—வாணகையார்
மாரன் குமணன் மதிமான மன்னப்பன் 61
பேரன் பிறபலன் பெரும்புகழான்—காரணிகன்
வன்பில் மருவார் வணங்கவரு தியாகப்பன் 62
அன்பில் வருஞ்செண் டலங்காரன்—முன்புலகில்

6. சுற்றமானவரும்-நட்பினரும்.

ஆண்டவரா யந்தணர்க்கு மானசொக்கர் வாழ்மதுரைத் 63
தாண்டவ ராயன் றருங்குமரன்—நீண்டதொரு

பூதலத்தி லாண்டியப்ப பூபால னைச்சிறிய 64
தாதையென வெண்ணுந் தயவினா—னோதரிய
சாத்தூரும் ஆற்றூருந் தைய்யூருக் கும்பெரிய 65
பாத்தூரில் வாழ்கங்கை பாலகனா—மேத்தமுள
தாயகம்போ லார்க்குந் தருங்குரிசி லாம்பெரிய 66
நாயகன் சொல்ராம னாதனையுந்—தூயனுயர்
சின்னான் குமரன் செயவிர ராகவன்நம் 67
மன்னாக வந்த வளவனையு—மின்னரவிற்
கூத்தை நடிக்குங் குரிசிலருள் பெற்றநயி 68
னாத்தையென வாழுங் குலனையும்—பூத்துலகி
லுஷ்ணமிகு சூரியனை யொவ்வு திகிரி யால்மளறத்த 66
கிஷ்ணனென வந்த செடியனையும்—விஷ்ணுவென
வாரா யணமுலைய ராமன் மதவேளாம் 70
நாரா யணனென்னும் நண்பனையும்—பாருலகில்
நீதன் புனித னெறிமான் வரராம 71
னாதன் றனையும் நலமாகப்—பேதமற
மூத்த தமையன்மா ரென்ன மொழிந்திடுவான் 72
காத்துலகை யன்றளந்த காலினான்—கோத்தபுகழ்ச்
செம்பியனைப் போலத் திகழுஞ் சரவணனைத் 73
தம்பியெனத் தானுந் தமையனென்பான்—அம்புவியில்
மாமனெனு னாமவண் டுவரா பதிதனக்கே 74
யானமரு கன்செண்ட லங்காரன்—நானிலத்தில்
வாசவனைப் போல வருவோன் மனுதூயன் 75
ராசரிக லெடசுமிநா ராயணனும்—பேசுபுகழ்
விஞ்ச திருவேங் கடம்வேங்க டேசுரனு 76
மஞ்சுந்து செங்கைமுகில் மன்னப்பன்—வஞ்சியர்க்கு
மூத்தா மழகிரிக்கு முந்துமுத்துக் கிஷ்ணனுக்கும் 77
அத்தானெ னுஞ்செண்ட லங்காரன்—நித்தியனாங்
கண்ணன் திருவேங் கடனாத பூபனையும் 78
புண்ணுந்தும் ராசகோ பாலனையும்—நன்னுபுகழ்ச்

சத்திய வாசகனுந் தம்பிநல்ல தம்பியையு 79
மைத்துன மாரென்ன மகிழ்வோன்—சித்தசமே
வெம்மானை மெய்தவீரன் வேங்கடா சலத்துக் 80
கம்மானெ னுஞ்செண் டலங்காரன்—செம்மையுள
ரத்னகிரி வாழ்வீர ராகவனுக் கும்மாமன் 81
ரத்னகிரி யன்ன ரமணீயன்—ரெத்தவண்ணத்
தூரண்பிள்ளைச் சிங்கமது ரைராசன் தொல்லுலகி 82
லாண்பிளைச்சிங் கஞ்செண் டலங்காரன்—மாண்புடனே
யின்னமின்னந் தாரணியி லேற்பவருக் கிங்கிவனே 83
யன்னதரு வாஞ்செண் டலங்காரன்—இவ்விலத்தில்
மாதவத்தி னோர்க்கும் மறையவர்க்கும் பாவலர்க்கும் 84
ஆதரித்து வாழ்வளிக்கு மன்னவனில்—நீதியுற்ற

வாகுபட்டர் வரலாறு

7. முன்றிலில் பட்டர் நிற்றல்

நாகை நகரில் நலமிக்க வேதகுல 85
வாகுபட்ட னென்றே வழுத்துவோன்—மோகமுடன்
அத்தைமகள் முத்தென்னும் ஆரணங்கைக் கொண்ட-
தல்லாற் 86
குத்துமுலை யாள்பின் குலத்தினாள்—முத்துநகை
வஞ்சியப ரஞ்சியெனு மாதுதனை யேமணந்து 87
நெஞ்சில் மகிழ்வாய் நிறுத்தவே—வஞ்சமற
இங்கிவர்க்கு வெவ்வே றிரண்டுமனை கட்டியுகந் 88
தங்குமிங்குங் கூடி யுணையுநா—ளிங்கிதமாய்
மன்னுமப ரஞ்சிவா சல்தன்னில்—வாகுபட்டன் 89
மின்னு முகங்கள் வெளிறியே—யின்னிலையாய்
நின்ற பொழுதுநெடுந் தூரத்தே யிருந்து 90
குன்றுமுலை யென்பாள் குயிலைப்போல்—வென்றிசையாழ்

8. பட்டரை, விறலி கண்டு வினாதல்.

வல்ல விறலியவள் வந்தணுகிக் கண்டிவனைத் 91
தொல்லைமறை வல்ல துரந்தரனே—யெல்லையிலாத்
துன்பக் கவலை சுரந்து நிறைந்ததெல்லாம் 92
அன்பிற் புகல வருளென்னப்—பின்பவனும்

9. பட்டர் தன்னிளையாளின் ஊடல் கூறல்

அன்னமே கேளென் னருந்துயர மத்தனையு 93
மின்ன மெவர்முன் னியம்புவேன்—கன்னியிவள்
எந்த னிளையாள் குடியா ளிவளிடத்தில் 94
புந்தி யொருநாள் முயங்கவே—சிந்தைதனைப்
பெதிக்கக் கண்டு பெருமூச் செறிந்தென்ன 95
ஓதிப் புகலென் றுரைத்துமே—கோபப்
பகையாகி யென்முகம் பாராமல் மெத்த 96
மிகையால் வளைநெரித்து வீழ்த்தித்—திகையாய்
நறநறெனப் பல்லை நருங்கக் கடித்துச் 97
சறசறெனக் கண்ணீர் ததும்ப—மொறமொறெனப்
பேசினா ளேதோ பிதற்றினாள் வந்ததெல்லா 98
மேசினா ளந்தமின்பா லேசென்றாள்—கூசாமல்
வந்து முகத்துமுன்னே மாது சுவைத்தயிதழ் 99
தந்து களித்த தறுகண்ணா—ளெந்தன்முன்
நில்லாதே போவுன் னிலவரமெல்லா மறிவேன் 100
சொல்லாதே சோரமெனச் சொல்லினாள்—மெல்லியே
மானே கிளியே மயிலே வரிவண்டே 101
தேனே கடைந்தெடுத்த தெள்ளமுதே—யானினித்தான்
செய்தகுற்றம் தேவரீர் சித்தத்திற் கொண்டுபொறுத் 102
துய்தவப்பே றாகுமித மூட்டுவீர்—மைய்தவழுங்
கண்ணே மணியே கரும்பே கருகூலப் 103
பெண்ணே மதனன் பெறுபேறே—வண்ணமிகும்

பைங்கிளியே யென்று பணிந்தே னிரங்காமல் 104
நங்கை யிகழ்ந்துவிட்டாள் வன்மமாய்—கங்கையிற்போ
ய்யாடவென்று சிந்தித் தரியதபா மாதலத்திற் 105
கூடவென்று நாளுங் குறுகுநாள்—நீடுபுகழ்த்

10. சித்திரவல்லியின் பிறப்புணர்த்தல்

[1] தென்கமலை யூரிற் [2]சிவனார்தஞ் சன்னிதியிற் 106
பொன்கமல வல்லியென்றோர் பூம்பாவை—முன்கவலை
கொண்டு வரங்கிடந்து கோமா னருளாலே 107
செங்கமல விழி யென்றோர் கிளிமொழியைப்—பெற்றெடுத்
தாள்

11. வளர்த்த சிறப்புணர்த்தல்

மாது பிறந்தவன்னாள் மண்டலிகர் கொண்டாடத் 108
தாது பிறந்தகுழற் றையலுக்கு—பூதலத்திற்
சித்திர வல்லியென்றோர் செய்யதொரு பேரிட்டாள் 109
[3] தத்தையர்கள் கண்டு தலையசைப்ப—புத்தமுத
மூட்டி வளர்த்தா ளுவகையொடுந் தன்னுடைய 110
பாட்டி வளர்த்தபடியென்னக்—காட்டுஞ்

12. ஆடல் பாடலில் தேர்ந்து வளர்தல்

சரளிசொல்லு முன்னமே சங்கீதங் கற்றாள் 111
முரளிமுதல் யாழ்தடவி மூட்டுஞ் சரளியெல்லா
மேற்றினாள் வீணைக் கியம்பினாள்—செய்யதுய 112
ராற்றினா லம்பலத்தி லாடினாள்—கோற்றொடிதான்

1. திருவாரூர்.
2. பூங்கோயிலில் எழுந்தருளியுள்ள தியாகேசப்பெருமான் சன்னிதி. 3. கிளி.

கல்லாத கல்வியில்லைக் காணாத காட்சியில்லை 113
வெல்லாத வித்தையில்லை மேதினிக்கு—வெல்லாருங்
கண்டுமயல் கொள்ளாத காமுகருந் தானில்லைச் 114
செண்டுமுலைக் குட்படாச் சிந்தையில்லைக்-கெண்டை விழி
மாதுக்கு மார்பில் வளரும் குரும்பையெனச் 115
சூதுக்கு நேரத் துலங்குமெனக்—கோதற்ற
செவ்விள நீரெனத்தி ரண்ட முலைபடைத்தாள் 116
கொவ்வை யிதழ்சிவந்து கோபித்தாள்—எவ்வன்ன
மாறாள் கலவியின்மே லாசைவைத்தாள் தேடியுண்ணும் 117
மானாரைப் பார்த்தும் வகையானாள்—தேனான
பேச்சி லிதழும் பிடிநடையி லேயொருகை 118
வீச்சி லநேக விதங்கற்றாள்—பூச்சியமாம்

13. பருவக்குறி, தாய் கண்டமை.

மங்கைப் பருவ மெய்தானா ளென்றறிந்து 119
நங்கைக்கு வைத்தொரு நாளிட்டுச்—சங்கைபண்ணிக்
கண்கரித்த தாயாம் கமலவல்லி யீன்றெடுத்தப் 120
பெண்கனியே கேளென்று பேசினாள்—வெண்கனியே

14. தாய்க்கிழவியின் அனுபவ அறிவுரை.

உன்புத்தி யேயதிக மானாலும் உண்மையதா 121
யென்புத்திக் கேட்க இசையுமே—பொன்பத்துத்
தந்தாலும் நட்டுவனைத் தள்ளிவிடு கொக்கோகர் 122
வந்தாலவ் வாசல்வழி வாராதே—சந்தோஷ
மாகப் பொருள்கொடுத்த மானிஷவா னானாலுஞ் 123
சாக மருந்து தனையிடாய்—மாகனக
மேரு முலையில் விதித்தநக ரேகையெல்லாம் 124
ஆரு மறிய அறிவிப்பாய்—தாருவவு

கூந்தல் முடித்துக் குவளைவிழி மைய்யெழுதிச் 125
சாந்து புழுகுந் தரித்திடாய்—பூந்தொடையிற்
கள்ளை வளர்த்துக் கருங்குழலா யோர்நாவிப் 126
பிள்ளை வளர்த்துப் பெரிதாக்காய்—வள்ளத்
தனக்கிளியே நீசந்த னக்கிளியும் பஞ்ச 127
வணக்கிளியும் கூடி வளர்ப்பாய்—சினக்குமுனை
வாளொத்த கண்ணால் மயக்கு மணக்குமுலைத் 128
தாளத்தைக் காட்டிச் சரசமிடு—கேளிக்கை
யாடும் பொழுது மறிவி லபிநயத்தாற் 129
பாடும் பொழுதும் பரிவாகத்—தேடிமலர்
சூட்டும் பொழுதுஞ் சுடிகை நுதற்குறிகள் 130
தீட்டும் பொழுதுஞ் செழுமுலையைக்—காட்டும்
பொழுதுந் தெருவில் வரும்போதுஞ் சருவி 131
முழுதும் பசப்பி மொழியால்—எழுதுங்
கலைகொண்டு மூடிக் கனதனத்தைக் காம 132
நிலைகொண்டு சற்றுடனே நீக்கி—முலைகொண்டு
காட்டி மறைத்துக் கயல்விழியா லாடசிங்கி 133
பூட்டிப் புதுமை புதுக்கியே—மேட்டியுட
னாட்டிவித்து மோகவலைக் காட்படுத்தித் தூயமடல் 134
தீட்டுவித்துத் தேன்மொழியாற் சிக்குவித்துத்—தீட்டு முல்லைப்
பற்கறையைக் காட்டிப் பசப்பிச் சிரித்துமனக் 135
கற்கரையக் காமுகரைக் கைக்கொள்ளாய்—துற்கைதனைப்
பூசித்துக்கொண்டுதினம் பொன்னுள்ளபோ கங்களுட 136
னேசித்துக் கொண்டிருக்க நேமியாய்—காசற்ற
வீம்பர் தமையும் விரகற்ற லோபரையுந் 137
தீம்பர் தமையுந் திருடரையுஞ்—சோம்பரையுஞ்
சேராதே தத்துவங்கள் தேர்த்தவரைப் பின்திரும்பிப் 138
பாராதே கைக்குட் படுத்துவார்—சீராக

மஞ்சள் மினுக்கு வளைக்கை கலுக்கிடுவன் 139
நெஞ்சம் மனதெல்லாம் நெக்குவிடக்—கஞ்சமலர்த்
தாளிணையிற் றண்டைச் சதங்கைத் தகுதிகௌத் 140
வாளவையா கண்கள் மருட்டிவரத்—தாள்
முலையைத் துலுக்கிநட மோட்டுப் புருவச் 141
சிலையைக் குனித்துச் சிணுங்காய்—நிலைபெற்ற
துட்டிக் கணக்கனையுந் தோய்ந்துவிடு தோய்வார்க்குச் 142
செட்டிக் கணக்காகச் செய்துவிடு—நட்டுவனார்
தன்னைச் சிநேகந் தவிராதே தானிகனைப் 143
பொன்னைப் பொருளாய்ப் புரியாதே—மின்னனையே
மெய்யுந் தயவு மவிநயமுந் தேட்டரவும் 144
பொய்யு மறிந்து பொருந்திநட—தையலே
நீரிற் குளிக்குமந்த நெட்டூரர் தங்களையும் 145
மாரில் மயிர் முளைத்த மல்லரையும்—தேரைகவி
பாராட்டும் வம்பரையும் பச்சிலையி லுண்டை பண்ணிச் 146
சீராட்டு மந்தத் திருடரையும்—நேராகச்
சல்லி விலைக்குஞ் சகசண்டி மாண்பரையும் 147
புலவர் தமையும் பொருந்தாதே—நல்லாய்கேள்
வாகடங்கள் கற்ற மருத்துவரை நம்பாதே 148
மோகனங்கள் சற்றும் மொழியாதே—பாகனைய
சொல்லாய் கலவித் தொழிலுக்கெல் லாமதிக 149
நல்லாய்யென் புன்சொல்லை நம்புவாய்—மெல்லியே
தானே தருவாரைத் தாவென்று கேளாதே 150
நானேமா னென்பாரை நம்பாதே—மானனையே
யந்திக் குளியை மறவாதே யன்னமே 151
சந்தைச் செலவைத் தவிராதே—முந்தவந்து

பேசிக் கழுத்தறுத்துப் பித்தாகப் பண்ணுவிக்கும் 152
தேசத் திருடரையுந் தீண்டாதே—பேசிவந்து
செட்டிப் பசங்கள் திரட்டிக் கொடுத்தாலும் 153
மட்டிப் பசங்களுடன் வாழாதே—தொட்டியரும்
சேணியரும் பள்ளியரும் சிற்பியரும் சோளகரும் 154
வாணியருந் தந்தால் மருவுவாய்—வாணகையே

15. பரத்தையார்களைக் கூறல்

ராகுபட்டர் வந்தால் மணியமுங்குணமும் 155
வாகுபட்டர் கெள்ளளவும் வாராதே—தாகமுற்ற
அச்சயனுக் குன்மீதி லாசையென்று சொன்னாலுங் 156
கிச்சயனைப் போலக் கிடையாதே—நிச்சயமாய்
சுப்பயனுங் குப்பையனுஞ் சொக்கயனும் வந்தக்கா 157
லப்பயனுக் கெப்படியு மாகுமோ—வெப்பொழுதும்
ரெங்கப் பயங்காரும் ராமயனும் வந்தக்காற் 158
செங்கப் பயன்போற் சிலுகாமே—நங்காய்கேள்
தக்கசெட்டி மாரு தவசிகளும் வந்தக்காற் 159
சொக்கசெட்டி தம்பியுடன் சொல்லாதே—யக்கரையில்
மன்னப்பன் பேசவென்று வந்தக்கால் வார்த்தையிலே 160
பண்ணப்ப னென்றே படித்திடாய்—மின்னுமணிப்
பூச்சியப்பன் பூணும் புதுத்துகிலுந் தந்தக்கால் 161
நாச்சியப்ப னைப்போல் நடத்துவாய்—பேச்சிலே
சிர் தூக்கிப் பார்த்துத் தெரிந்து நடந்துகொள்வாய் 162
வார் தூக்குங் கொங்கை மடமானே—தார் தூக்கும்
மைக்குழலே யென்று வகுத்துரைத்த புத்தியெலாங் 163
கைக்கு வசமாகவே கைக்கொண்டாள்—பொய்க்குமவள்
பாக்குமிவள் தோப்புமெனப் பண்பாய் நடந்துகொண்
டாள் 164
வாக்கு மனமும் வளமானாள்—நீக்கமறச்

16. சித்திரவல்லியின் பணிப்பெண்கள்

செங்கி கமலி திருமாலை செவ்வந்தி 165
மங்கி கலைகி மதுமாலை—ரங்கமுத்து

மாணிக்கஞ் செம்பவள வாச்சிமுடி மன்னவர்க்கோர் 166
காணிக்கை யான கனகவல்லி—யாணிப்பொன்

தையல் சிலைக்கொழுந்து சாந்தி கருப்பூர 167
மைப்பவளி ளைக்கும் மடமாது—வெய்யபொரு

காமவல்லி வங்காரங் கத்தூரி செங்கமுத்து 168
சோமவல்லி சிங்காரி தூயவல்லி—தேமருவும்

பூமே லபரஞ்சி புத்தமுதம் பொன்னுமணி 169
கோமே தகங்கறுப்பி கொஞ்சுகிளி—நேமமுடன்

17. பணிப்பெண்களின் செயல்கள்

இந்தவகை மாதரிடைவிடா தேயிருந்து 170
சந்தவகை கூட்டித் தடவுவா—ரந்தரங்க

மேடை யலங்கரித்து விந்தை பெறவமைப்பார் 171
சாடைசொல்லி மெல்லத் தலையசைப்பார்—கூடவரு

வார்க்குச் சமைப்பார் வருவாரைப் போயழைப்பார் 172
ஊர்க்கு வழிவிட் டுபசரிப்பார்—நீர்க்குமிழி

விட்டமுது சாலம் விளர்புவா ராசையிலே 173
பட்டமுத தென்னப் பதைப்புறுவார்—கட்டமுகி

யாசையுன் மேலென்றே யழைப்பாரிவ் வையகத்தில் 174
வேசியன்றே யெங்கள் விளக்கென்பார்—மாசிலா

முத்தென்பார் பொன்னை முடியென்பார் மேவியபொன் 175
பத்தென்பார் சேலை பறியென்பார்—முத்துமணி

கோப்பார் கொடுப்பார் கொடுப்பார்கள் தம்மிடம்போய்
காப்பார் விளங்கியபற் காட்டுவார்—வேப்பிலையுங்

கைப்புயாய் மெள்ளக் கூட்டித்துவா ராரிடத்தும் 177
பொய்யைநா வேற்றுப் புகலுவார்—நெய்யிலே
கைப்யிடவுங் கெண்டையெனக் காட்டும் விழியொழுக 178
மைப்யிடவு மேதுணியும் வல்லியார் — அய்பனார்

18. காமுகரை அடிமைப்படுத்தும் வசிய மருந்து

கோயிலில் நத்தைவேர் கொம்மிடிக்காய் பீர்க்கங்காய் 179
தூய பருத்தி துளசிவேர்—நாயுருவி
பூளை சிறுதும்பை பொன்முசுட்டை வெள்ளருகு 180
வேளை சடைச்சி விஷ(மூங்கில்)—சாலைமண்
வாழைக் கிழங்கு மரமஞ்சள் வெங்காயந் 181
தாழைக் கிழங்கினொடு சாராயம்—ஆழத்தில்
வைத்த குருவிமுட்டை வெண்ணையன் கழுதைமயிர் 182
தைத்த செருப்பிற் சுத்ததோல்—மொய்த்தசிறு
வாரகத்திப் பிஞ்சு மருக்காரை செம்முள்ளி 183
நீரகத்திற் கண்டதொரு நெட்டிவேர்—சீரகத்தி
னோடு கருப்பூர முப்பிலிக்காய் சாதிக்கா 184
யாடு கிடந்திடத்தி லம்மயிரு—காடையிற்
கோந்தி நிலம்பிறண்டி யோணான் சிறுபுளடி 185
சிந்தில் முருங்கைவேர் செம்பரத்தை—காந்தமொடு
மூங்கில்மேற் புல்லுருவி முன்னைக் கருங்காலி 186
வேங்கைநகம் வெண்சாரை வெண்கடுகு—பாங்கியர்தங்
கைநகங் காலின்நகங் காக்குறட்டான் தாய்க்கிழவி 187
மெய்யி லழுக்கு விழிப்பூளை—பையாவின்
வாயி லுமிழ்ந்தநீர் வண்ணான் துறையழுக்குப் 188
பாயி லுதிர்ந்த பசுமஞ்சள்—ஆயர்கால்
வைத்தடியில் மண்ணும் வழிக்கரையிற் றப்பலமும் 189
நத்தைத் தடியில் தவளைகளும்—நெய்த்தலையும்

பல்லி கருஞ்சாரணை பற்படகம் மாதுளங்காய் 190
கொல்லி மலையிற் குறிஞ்சித்தேன்—நெல்லின்வேர்
பன்றிமலைப் பச்சை பருமலையிற் சோங்கின்காய் 191
குன்ற மலையிற் கொடுவேலி—நன்றெனவே
இந்த வகைமருந்தை யெல்லாம் பறித்தெடுத்து 192
முந்தமுலைப் பால்விட்டு மூடிவைத்தே—யந்திசந்தி
யம்மிபா லுண்ண வரைத்துண்டை பண்ணிவைத்துச் 193
செம்மையுடன் காய்ச்சித் திறமாகக்—கொம்பைமுலை
மாதர் பரிகரித்து வந்தவருக் கன்பினோடும் 194
ஆதரவாய்ப் பாலி லளித்திடுவார்—தீதிலொரு

19. மருந்தூட்டப்பட்ட காமுகர் படும்பாடு

சங்கையற போகந் தனியாமற் கொண்டவுடன் 195
பங்கையப்பூ மாமுகத்தைப் பார்ப்போருங்—கொங்குமலர்த்
தேனைக் கனியைத் தெவிட்டாத தெள்ளமுதை 196
மானை மடலில் வரைவாரு—மானமுட
னாத்திரங்கள் போல அரிவைதனக் கேற்றபடித் 197
தோத்திரங்கள் பண்ணித் துதிப்பாரும்—ஏத்தமுடன்
நேய மிகுந்தனைய நேமியா ரோவென்று 198
பாய விருந்து பதைப்பாரும்—நாயகம்போற்
பச்சைமுத்து மாணிக்கம் பன்பொனிழைத் திட்டதொரு 199
கச்சைமுத்தி யேந்திமுலைக் காண்போரும்—அச்சமில்லா
நோய்க்கிழவி பொல்லா நொடிக்கிழவி சண்டையிடுந் 200
தாய்க்கிழவிக் கஞ்சித் தவிப்பாருஞ்—சாய்க்குநறை
யாம்ப லிதழ்த்தே னருந்துவதற் காசையினாற் 201
றேம்பி யழுது திரிவாரு—மேம்படவே
உற்பனத்தி னாலே யுவகையொடு மானனையச் 202
சொற்பனத்திற் கண்டு துடிப்பாரும்—அற்பர்தம்
வீட்டுச் செலவுக்கு வேண்டுதல்போல் மானம்பி 203
யாட்டுச் செலவுக் கலைவாரும்—வாட்டடங்கண்

மாது கலங்கி மறிவிழிகள் கோபித்தாற் 204
றாது கலங்கித் தவிப்பாரும் — மாதுநல்லாள்
கேட்ட பணங்கொடுத்துக் கேடான நோவுகொண்டு 205
வீட்டை விருப்பி விரைவாரும் — நாட்டமுடன்
அம்பலத்திற் கண்ட முழுக் காசையினாற் செங்கனிவாய்த் 206
தம்பலத்தைத் தின்று தணிவாருங் — கொம்பனையை
போற்றிச் சிரங்கைக் கிருபுறமுங் கொட்டளித்த 207
சூத்திற் சிரங்கைச் சொறிவாரும் — ஏத்தவல்குற்
பாந்தளுக்கும் பாடும் படிப்பிற்குந் தூயநறுங் 208
கூந்தலுக்கும் நெஞ்சங் குலைவாருஞ் — சாந்தமாய்
மல்லிகை முல்லை வசந்தன் றிருநாளுக்
கெல்லையிலோடி யெடுப்பாரு — முல்லைநகை
நங்கையைப் போலுமிந்த நானிலத்தி லில்லையெனக் 210
கொங்கையைப் பார்த்துக் குதிப்பாரும் — மங்கைநல்லாள்
பண்டு மிருந்த பரிவுமன்பு மில்லாது 211
கண்டிருந்துங் கூடக் கரைவாருங் — கொண்டிருந்த
கப்பற் புகையிலையைக் காணச் சுருட்டியுடன் 212
கொப்பெனவே யோடிக் கொடுப்பாருந் — துப்பிதழாள்
சொன்னத்தைக் கூடச் சொலுவாரு மாம்பழம்போற் 213
கன்னத்தை யொட்டிக் கடிப்பாருந் — துன்னுவிரல்
நெட்டி முறித்து நெடிதுயிர்த்துக் கையாற் 214
கட்டி யணைத்துக் கனிவாரும் — இட்டமுட
னாசை யிருக்குதெனை அப்பவடை பண்ணியாரந் 215
தோசை யிருக்குதெனச் சொல்வாரும் — நேசமுடன்

20. தென்சமலைக்கு வாகுபட்டர் வருதல்

இவ்வகையே பேர்பெற் றிருக்குநா ளவ்வூரைச் 216
செவ்வழியே யாலுந் தெரிசிக்க — அவ்வழியே

சென்றே நதிபடிந்து சேவித்தேன் மாவினையேன் 217
அன்றே பலத்தை யகற்றினேன் — நன்றெனவே
கோயில் புகுந்தேன் குருபரனைச் சேவித்தேன் 218
வாயில் புகுந்து வரும்போது — சேயிழையும்

21. சித்திரவல்லியைக் கண்டு காமுறுதல்

நின்றாள் கடைக்கண்ணை நீட்டியென் னாருயிரைக் 219
கொன்றாள் கொடிய கொலைகாரி — குன்றாத
கும்ப முலைக்கோ குயில்மொழிக்கோ தேனொழுகுஞ் 220
செம்பவழ வாய்க்கோ சிறுநகைக்கோ — அம்புலவு
கண்ணுக்கோ நெற்றியிட்ட கத்தூரிப் பொட்டுக்கோ 221
பண்ணுக்கோ பாடும் படிப்பிற்கோ — தண்ணுலவும்
வாழைத் தொடைக்கோ மதிமுகத்துக் கோவிளங்கும் 222
வேழக் கரும்பனைய மென்கைக்கோ — மாழைமணிப்
பட்டுடைக்கோ பூணும் பணிக்கோமென் காந்தளங்கை 223
கட்டும் பவழக் கதிப்புக்கோ — நட்டணைக்கோ
நாகரீகத்துக்கோ நங்கைநடைக் கோபுதிய 224
மோகமோ பத்துக்கோ முன்னிலைக்கோ — தோகைமயிற்
சாயலுக்கோ முத்துமணித் தாழ்வடத்துக் கோபுயமாம் 225
வேயினுக்கோ கட்டழகி மென்மைக்கோ — தூயமயல்
நீச்சுக்கோ கொந்தளத்தின் நெற்றிக்கோ பங்கயக்கை 226
வீச்சுக்கோ நெஞ்சம் வெதும்பினேன் — வாசத்தொரு
வாடைக்குள் மெலிந்தேன் வாழும் புவியுடுக்கும் 227

22. வல்லியின் பாங்கும் காமக்குறிப்பும்

ஆடைக்கு நொந்தே யயர்ந்திட்டேன் — தேடரிய
சிற்றடியிற் கொஞ்சுஞ் சிலம்புங் கலகலெனச் 228
சுற்றுங் குயில்கள் சுரங்காட்டக் — கொற்றமதன்

வொளி தொடுக்க மதிவெண் குடையோங்க 229
ஆளியன்ன தென்ற லடுத்துவர — காளையர்தஞ்
சிந்தை சுழலத் தெரிவையர்கள் சூழ்ந்துவரச் 230
சந்திரமுக வட்டந் தளதளென — விந்தைபெற
அன்ன மொதுங்க வரசர் பிடியானை 231
யின்ன மொதுங்க வியல்நடந்து — மின்னனையாள்
வீட்டிற் புகுந்தாள் விரும்பியது போற்கடைக்கண் 232
காட்டிப் புகுந்தாள் கடன்காரி — நாட்டமுடன்
சென்றேன் கடுகத் திருப்பிற் கூடத்தில் 233
நின்றேன் மனது நிலையாகக் — குன்றரத

23. பட்டரைப் பாங்கியர் சந்தி செய்தமை.

வாழிமாலி யானை வனமுலையா ளுக்குரிய 234
தோழிமார் வந்தென்னைச் சுற்றினா ராழியமு
தன்ன மடவீ ரரிவைதனக் கேபணைய 235
யென்ன சொலுமென் றியம்பினேன் — அன்னவருங்
மூன்னூறு பொன்னில் முடிப்பொன்ற தல்லாமற் 236
பொன்னூறு தாய்க்குப் பொருத்தமவர் — மின்னார்கள்
தங்களுக்குப் பேசித் தருவதுவும் நாற்பதுபொ 237
னெங்களுக்கு முப்பதுபொ னின்றைக்குக் — குங்குமமுஞ்
சந்தனங் கத்தூரி சாந்து கருப்பூரங் 238
கெந்தபொடி கொள்ளுங் கிரயத்துக் — கெந்தவகை
யானாலு முப்பதுபொ னந்தரங்க மேடைதனைத் 239
தேனார் மொழிக்குச் சிறப்பிக்க — மானார்க்குப்
பத்துப்பொன் பாக்குவிலை பத்துப்பொன் சேலைவிலை 240
பத்துப்பொன் பின்னையுமோர் பத்துப்பொ-னிந்தனையும்
வேணுமென்று சொன்னார் விரும்பியநா ணாதலினாற் 241
பாணிக்கொண்ட மட்டும் பரிந்தளித்தேன் — வாணுதலார்
காணாது போலக் கமலவல்லி பாலுரைத்தார் 242
கோணாது வாஞ்சைக் குமுறியே — வீணான

24. தாய்க்கிழவி, கண்டு உபசரிசத்தமை

வாய்க்கிழவி யெல்லா மடைக்கிழவி யன்னேரந் 243
தாய்க்கிழவி வந்து தலைப்பட்டாள் — பாக்கியங்கள்
யண்ணினோ மின்று பலித்ததென வோணதி 244
யெண்ணினோம் யாங்களே யேறினோம் — நன்று
மறையவரே நீடி வளர்நிலத்தி லார்க்கு 245
மிறையவரே யென்று மியம்பீ — முறைமுறையே
கூப்பிட்டாள் மெத்தக் குழைந்தாள் பலகாலும் 246
வப்பிட்ட கூந்தல் மடமாது — செப்பிட்ட
காதுந் திருநீறுங் காட்சியுமாய் வந்தொருத்த 247
ரோதுஞ் சகுனத்தி னுண்மைகளுங் — கோதிலாத
தெள்ளுதமிழ் வாணர்சொல் செய்ய தமிழ்க்கவியும் 248
வள்ளுவனார் சொன்ன வழிநூலு — முள்ள
முடையான் பழமொழியு மோதுந் துளபத் 249
தொடையான் கருடன் றொனித்த — அடையாளங்
கண்டோமே சூழ்ந்த கலியெல்லா மின்றளவே 250
விண்டோமே வாஞ்சை மிகுந்தோமே — பண்டைநாள்
வாராத பேரில்லை வந்துசெம்பொன் வேண்டியதுந் 251
தாராத பேரில்லைத் தந்தாலும் — பாரமெல்லாந்
தாங்கவல்ல பேரோ தனத்திற் பெருமையினி 252
லோங்கவல்ல பேரோநம் பொன்கொடிக்கு — நீங்காமற்
கூடி யிருக்கவல்ல கொண்கரோ கூசாமற் 253
பாடி யிருக்கவல்ல பண்பரோ — ஆடல்மதன்
நூலிற் பழக்கமுள நுண்மை யறிந்தவரோ 254
சால வழகிற் சமத்தரோ — பாலனைய
சொல்லாளுக் கிந்த துரையைப்போற் கண்டதுண்டோ 255
வல்லார்க்கு வல்லவரும் வந்தாரோ — அல்லாம
லார்வந்து மும்மைப்போ லாவாரோ அய்யரே 256
நீர்வந்த தெங்களுக்கு நேற்றிக்காண் — கார்வந்த

கூந்த லுடையீர் குளிந்தமுக முங்குணமு 257
மேந்துந் தனத்தாளுக் கெங்கிருந்தார்—மாந்தரி
லிப்படியுங் கண்டதுண்டோ வெங்களதிட்டமை 258
மிப்படி வந்துதா னெய்துமோ—மைப்படியு
மேலங் குழலாள் கிடந்துடக்கு தென்றதெல்லா 259
மேலங் குழலாளுக் கெய்தவோ—நீயுவிழி
மின்னனையீர் பாதம் விளக்குமென்றா ளப்பொழுது 260
மின்னனையார் பாதம் விளக்கினார்—பொன்னினைய
ஆடை கொடுதுடைத்தா ரந்தரங்க மானதொரு 261
மேடையினில் வாராமல் வீற்றிருந்தீ—ராட வரே
உம்முடைய விடாச் சுமக்கடிமை நாங்களினி 262
யெம்முடைய கத்தரே யெழுந்தருளும்—பொம்மெனவே
யென்றாள் கமலவல்லி யென்னுமுன் மின்னனையார் 263
மன்றார் பளிங்குமணி மண்டபத்தில்—நன்றாக

25. பாங்கியர் பள்ளியறை ஒப்பனை செய்தல்

மஞ்சத்தில் மெத்தை விரித்து மலர் தூவி 264
யஞ்சத்தை நிகரு மரிவைக்குப்—பஞ்சொத்த
பட்டுத் தலையணையும் பாரத் தழுவணையுங் 265
கொட்டு விளாச்சுக்கால் கொட்டைகளுந்—திட்டமிட்டு
மேற்கட்டி தானித்துச் செண்பகத்தார் (தொங்கல்) 266
மேற்கட்டித் தூக்கணுமே மேற்கட்டிக்—காற்கட்டிற்
கீழோர் படிக்கமுடன் கெண்டிவைத்துக் குங்குமங்கள் 267
கூழோ வெனவுங் குழைத்துவைத்து ஈழக்
களிப்பிளகு வைத்துக் கருப்பூரம் வைத்துக் 268
களிப்பாக்கோ டேலங் கலந்து—விளக்கமுடன்
வெள்ளிலையும் வைத்து விரும்பி விளக்குவைத்தார் 269
உள்புகுந்து மேடை யுகந்திருந்தேன்—மெள்ளவந்து

26. பாங்கியரின் பணிவிடைகள்

காலைப் பிடிப்பார் கமலமுக வேர்துடைப்பார் 270
மேலைப் பிடிப்பார் விசிறுவார்—சாலத்தை
மெய்யென் றிருப்பேன் விழிப்பே னதிசயிப்பேன் 271
பொய்யென் றிதையப் பொருந்திடேன்—சேயிழையும்

27. வல்லியின் தோற்றமும், வாகுபட்டரின் மாற்றமும்.

வந்தாளருகிலுள்ள வையமெல்லா மென்னிடத்தே 272
தந்தாள் கொடிய தறுகண்ணி—முந்தானை
தன்னை யொதுக்குந் தகைமைக்கோ கண்ணைகாட்டி 273
பொன்னை யொதுக்கும் புடவைக்கோ—மின்னனையாள்
நின்ற நிலைக்கோ நெறிப்புக்கோ வேல்விழியாற் 274
கொன்ற கொலைக்கோ கொடுமைக்கோ—மன்றல்சேர்
மஞ்சள் குளித்த வளமைக்கோ வஞ்சமெல்லாம் 275
நெஞ்சொக் கொளித்த நிலமைக்கோ—அஞ்சத்தை
யொத்த நடைக்கோ நானொவ்வொன்றுக் கோபுகல்வேன்
தத்தை மொழியாள் சதுரிக்கை—மெத்தையின்மேற்

28. சித்திர வல்லியின் கலவிச் செயல்

கூடவிருந் தான்குழைத்த சந்தனம் பூசினாள் 277
வாடை திமிர்ந்து மலர்முடித்தாள்—நீடுபிள
வேந்திக் கொடுத்தா ளிலையுங்கற் பூரமுங் 278
காந்திக் கரத்தினாற் கைக்களித்தாள்—ஏந்துதன
மின்னாள் மடியில் விழுந்தா ளிளநகையா 279
லென்னா ருயிரை யிறுக்கினாள்—மின்னாரைக்
கண்காட்டி யப்பாற் கடத்தினாள் கந்தரத்தின் 280
பண்காட்டி ராகமொன்று பாடினாள்—தண்காட்டும்

வட்ட முகத்தை மதிமுகத்தோ டொற்றினாள் 281
கட்டி யணைத்துக் கருதினாள்—பட்டாடை
தன்னை நெகிழ்ந்தாள் சரசமிட்டா ளுச்சியினில் 282
உன்னி நகமுறைக்க லூன்றினாள்—பொன்வளையின்
ஓசை கலகலென வோர்தா டனஞ்செலுத்தி 283
யாசை பெருக வணைத்திட்டாள்—கூசாமற்
செவ்விதழைக் கவ்வித் தெவிட்டாது போலுருஞ்சிச் 284
செவ்விதழை யுண்டு தெவிட்டினாள்—செவ்விதழைத்
தானுங் கொடுத்தாள் சலியாம லூறியசெந் 285
தேனுங் கொடுத்தாள் திரும்பினாள்—மானமுடன்
மெத்தப் பழக்கமென வேண்டும் வகையறிந்தாள் 286
தத்து முலை யாலுரத்திற் குத்தினாள்—பத்துவிசை
கன்னத் தடித்தாள் கடித்தாள் பரிகரித்தாள் 287
சின்னஞ் சிறுக்கியெனச் செப்பினாள்—சொன்னத்தைச்
சொல்லுவாள் கூடச் சுகிப்பாள் மதனையும் 288
வெல்லுவாள் போகம் விளைத்திடுவாள்—சல்லாப
மாரனென்பாள் பொட்டு மயக்குவாள் காமுகரில் 289
வீரனென்பாள் கொண்டாடி மெச்சுவா—ளாரிலித்தா
னுன்போற் கிடையாதே யுன்கலவிக் கேற்றபெண்க 390
ளென்போற் கிடையாதே யிவ்வுலகில்—முன்பாகச்
சொல்லென்பாள் வேர்வைத் துடைப்பென்பா ளின்றினித்தா
னில்லென்பாள் வாங்கி நிறுத்தென்பாள்—வெல்லென்பாள்

29. கலவி யனுபோக வகை கூறல்

வாழைத் துடையால் வலிய நெருக்கிடுவாள் 292
வாழைத் துடையால் வளைக்குவாள்—தாழ்வறவே
கொஞ்சிக் குனிக் குமுறிப் படபடப்பாள் 293
வஞ்சிக் கொடியிடையை வாட்டுவாள்—பஞ்சணையில்
மெல்லக் கிடத்தியெந்தன் மேலேறி யூஞ்சலெனத் 294
தள்ளி யசைத்துத் தனுக்கொள்வாள்—மெல்லெனவே

கொண்டை சரிந்து குலைந்து விரிந்திட 295
வண்டின மெங்கு மயங்கிட —வெண்பாய்
விஞ்சினைப் பொன்றிடு மென்று புலம்பிட 296
நெஞ்சு குழைந்து நெரிந்திட—நஞ்சமா
வண்கள் சினந்து கலங்கி மருண்டிட 297
வண்குழை நின்று மயங்கிட—நண்பொறு
மஞ்ச மமைந்திட மன்றல் மிகுந்திட 298
வெஞ்சினம் நெஞ்சில் விளைந்திட —வஞ்சவெண
முத்துடை முஞ்சிதற முத்தநகையும்புலர 299
முத்துவியர் வுஞ்சிதறி முத்துதிர—வைத்ததொரு
செண்டை விழி சண்டையொடு கிண்குநறை யுண்டுவளர் 300
வண்டுலவு கொந்தளகம் வந்துலவ—மிண்டுசெயும்
மங்கல மாரனும் வந்து சலாமிட 301
நங்கை யராமிது நன்றென—விங்கித
மெத்த மதச்சல மெத்தை நனைத்திட 302
வொத்த ரதிக்கிணை யொத்திட—நித்திய
கங்கண நித்திரை கண்களு மிட்டிட 303
வங்கண மெத்த வழங்கிட—அய்ங்கணை
யாகம நூல்வழி யாக வுலாவர 304
வர்கமெ லாமெழு காய்வர—மாகனக
மேரு முலையாள் விதித்தகர ணாதிகளை 305
யாரு மறிவரோ அம்புவியில்—காரணம்போல்
நாகபந்தம் பண்பான நாகரீ சுக்கரணம் 306
ஆகபந்த மாகியதோ ரம்புயமுந்—தாகமுட
னாமைக் கரணம் புலிக்கரணம் அன்பான 307
சேமக் கரணத் திருகணியும்—ஆமெனவே
யெட்டெட் டறுபத்து நாலு மியற்கையுடன் 308
கட்டி யணைத்தாள் கரும்பன்னாள்—திட்டமுடன்

தத்துவங்கள் பார்த்துத் தடவித் தலமறிந்து 309
புத்தி மருளாமற் பூரையிட்டுத்—தத்தைமொழி
தேசப் பரவசமுந் தேர்பிச் சிணுங்கியொரு 310
மோக வெழுச்சை முழுங்கியெழப்—பாகனையாள்

30. வல்லி—பெறுநயப்புரைத்தல்

அய்யாயென் னய்யா அவுரா இனிவருமோ 311
அய்யா சமயமிது வாமென்பாள்—சையோகம்
இன்றை வரைக்கு மினிமேலு மின்றுபோ 312
லென்று கிடைக்குமோ யென்சுவாமி—நன்றுநன்றென்
னாகந் தனையுருக்கி யாட்கொண் டாய்கொடியேன் 313
சோகந் தனையுந் தொலைத்தாயே—மோகமிகு
மாவல் தெளிந்தேனென் னய்யனே யாரினித்தான் 314
மேவும் வகையறிந்த மென்மையார்—காவலனே
தான் திரண்ட நாளில் நலமிக்க காளையவன் 315
தான்திரண்ட தோளான் சதுராளன்—நான்பழகி
யன்றவனைக் கண்டே னதுவரைக்கு மிவ்வரைக்கும் 316
இன்றுன்னைக் கண்டே னினியார்கள் ணென்றுசொல்வாள்
நானு மவளைப்போல் நானிலத்திற் கண்டதில்லைத் 317
தேனொண் மொழியாள் திறம்போல—மானனையே
சீர்க்காரம் பூர்காரம் செய்து வரிசிலைக்கைத் 318
தேர்க்காமன் வாழுந் திருநாள்—பராக்காகச்
செய்து முடித்ததுபோற் றேகமென்று போகிக்க 319
மைய்தவழுங் கண்ணாள் மருவினாள்—சையோக

31. இன்பத்திளைப்புடன் இயைந்த நிகழ்ச்சிகள்

மேடையெல்லாங் காமவெள்ள மெத்தக் கரைபுரண்டோ
ராடிவெள்ள மென்ன அலைமோத—நாடகியார்
மெத்தக் களையாய் விழுந்தாள் விசிறென்பாள் 321
தந்தைமொழி பேசத் தறுகினாள்—குத்துமுலை

வைத்த நகத்தை மதித்தாள் மணித்துகிலால் 322
முத்துநகை காட்டிமெள்ள மூடினாள்—கொத்தலர்பூம்
பாயல்விட் டுக்கீழ் பதைத்திறங்கிப் பூந்துகிலைத் 323
தூய மருங்காரச் சுற்றினாள்— ஆய்மலர்த்
தொல்லைக் குழலைச் சொருகிக் கனியிதழிற் 324
பல்லுக் குறியைப் பறித்தறிவாள்—நில்லாம
லோடுவாள் முற்றத் துலவுவாள் செங்கயற்கண்
போடுவா ளாசை புதுக்குவாள்—கேடுடையேன்

32. பரத்தையர் வீட்டுப் பகட்டுகள்

கண்ணியிற் சிக்கிக் கலங்கிக் கருத்தழிந்தேன் 326
நண்ணி யவர்குணத்தை நம்பினேன்—பெண்ணமுதே
கண்டா னெனது கருத்தறிந்து காமுகரைக் 327
கொண்டாவ தில்லைக் குறித்திடாய்—பெண்டாகப்
பாவித்து மெள்ளப் பறப்பதுவே நீதியினிக் 328
கோவித்துக் கொள்ளாதுட் கொள்ளென்று—தாவித்த
கள்ளி கமலவல்லிக் காதிற் கசுபிசென 329
மெள்ள வுரைத்தாள் விலைமாறி—யுள்ளதென
எங்களையய னென்பா ரிருநிலத்தி லெவ்விடத்து 330
மெங்களையய னைப்போ லிலையென்பா—ரெங்களையயன்
சொன்னபடி யல்லாமற் றோகைக்கும் யாவருக்கும் 331
மின்ன மொருமூச்சி ருக்குதோ—மின்னனையீர்
வீட்டி லுள்ள பேர்க்கும் விருந்துக்குஞ் செல்வதெல்லாங் 332
கேட்டரிசிக் கோட்டைதனைக் கிண்டென்பாள்—
தோட்டத்திற்
காய்க்குங் கறிக்குங் கடலைக்கும் வேண்டியபுற் 333
பாய்க்கும் பறிக்கும் பருப்பிற்குந்—தாய்க்கிழவி
சேலைக்கும் வீட்டிற் சிறுக்கிசட்ட மிட்டெழுது 334
மோலைக்குந் தீட்டு முரலுக்கும்—பாலுக்குங்
கேட்டு நடப்பார் கிளிமொழியா ளுள்ளாக 335
வீட்டில் நடக்கும் விதமெல்லாம்—வாட்டடங்கண்

33. வல்லியின் பொய்முயக்கம்

மானா ளெனது மடிமீதி லல்லாது 336
தானாக வேறே தனித்திராள்—தேனூறும்
வாயிதழை யுண்டு வயிறிரப்பு வாளலது 337
பாயி லகலப் படுத்திராள்—வாயிலுற்ற
தம்பலத்தைத் தின்று தகைதெளிவ தல்லாமற் 338
றம்பலத்தை வாயில் தரிக்கொட்டாள்—கம்பளையாய்
சற்றே மடிமீதிற் சாய்வதுவே யல்லாமற் 339
சற்றே தழுவணையிற் சாயொட்டாள்—முற்றத்திற்
றன்னை நடப்பிக்கத் தான்நடப்ப தல்லாம
லென்னை நடங்க விசைந்திடாள்—அன்னமுதல்
முந்தி யருந்த மொழிவதுவே யல்லாமற் 341
பிந்தி யருந்திற் பெரிதாறாள்—நதிவெள்ள
தானகட்டு முன்னந் தரிப்பிப்ப தல்லாமற் 342
றான்கட்டிப் பின்கட்டச் சம்மதியாள்—ஊன்கட்டு
கொங்கை பிடிக்கக் குளிர்வதுவே யல்லாமற் 443
செங்கை பிடிக்கத் திருந்திடாள்—குங்குமப்
பூசு முன்னந் ததும்பப் பூசுவ தன்றித்தான் 344
பூசிப்பின் பூசச் சஞ்சரியாள்—மான்பார்வை
தன்னை யொருவர் சலித்துமிக வைதாலு 345
மென்னை யொருவ ரியம்பொட்டாள்—நன்னுதலாள்
பண்டுவந்து சேர்ந்தப் பழங்கடன்க ளானாலுங் 346
கொண்டுவந்து தந்து கொடுப்பிப்பாள்—ஒண்டொடி
யென்னை யொருவரையு மேறிட்டுப் பார்க்கவொட்டாள்
தன்னை யொருவர் சருவொட்டாள்—பன்னுதமிழ்
பாடிவந்தா லைய்யன்முன் பாடென்பா ளாரேனுந் 348
தேடிவந்தா லய்யனுடன் செப்பென்பாள்—பாடகனை
அய்ய னிடத்தி லகலா திரவுபகல் 349
செய்யபதம் பாடென்று செப்புவாள்—தய்யலரைப்

பக்கத்தி லிருந்திப் பணிவிடைகள் செய்விப்பாள் 350
செக்கச் சிவந்தயிதழ்த் தேன்நல்லாள்—பக்குவங்கள்
பார்ப்பாள் பரிகரிப்பாள் பட்சமவைத்தார் போலிருகச் 351
சேர்ப்பாள் கனிமரள் சிணுக்குவாள்—தோர்க்காமல்
நண்ணு மருக்கொத்தார் நளினத்தாள் நாள்முழுதுங் 352
கண்ணியிமைக் கொட்டாள் ககமாலி—எண்ணரிய
தெய்வ சோமமுர்வெல் லம்போலத் தின்னுங் கொடுசூரி
மைய்வசமாஞ் செப்பொன் பறிப்பதற்குக்—கைய்வசமாம்

34. பட்டர் வசியமருந்துண்டமை கூறல்

வந்தாளென மோமருந்தைப் பாலிற் கரைத்துத் 354
தந்தாள் கொடிய தறுகணணி—பிந்தாமல்
வாங்கிக் குடித்தேன் மயங்கினேன் ஆசையிலே 355
தேங்கிக் கொடுத்தேன் சிறியனேன்—பூங்கொடியுங்
கண்டா ளெனது கதிப்பும் பரபரப்பும் 356
விண்டாளெனக்கு விபரமாய்—உண்டெனவே

35. பொன் பறித்த புதுமை

அய்யனென அப்பனென அண்ணனெனப் பேசிமெள்ளத் 357
தையலரும் வாங்கத் தலைப்பட்டார்—மைய்யெழுதுங்
கண்ணாள் வளர்த்த கருப்பூர வல்லிக்குப் 358
பண்ணாரப் பாடுவித்தப் பாடகனுக்—கெண்ணாமல்
துப்பட்டி யென்று துவக்கினார் பிள்ளைக்குக் 359
கப்பட்டி யென்று கருதினார்—அப்பட்டி
விக்கிரமா தித்தன் விருப்புங் கதையுரைத்த 360
சக்கிர பாணிக்குச் சமையென்றார்—அக்கரையில்
நாகப்பன் நெய்யும் நடுத்தறியில் துப்பட்டிக் 361
காகப்பொன் வாங்கி அமர்த்தென்றார்—தியாகப்பன்

தப்பிக் குருமாலை தப்பிகொண்ட பொல்லாத 362
வப்பிக்குச் சேலையொன்று வாங்கென்றார்—நம்பிக்கும்
நாயகத் துக்கும் நலத்தமுத்துச் செங்கிக்குந் 363
தாயகத்திற் போய்ச் சலிப்பாறப்—போய்வருதற்
கெட்டுநா ளைக்கு மிலைபிளகு கற்பூர 363
மட்டும் பணம்பத்து வைய்யென்றார்—நட்டுவனா
ராட்டிவித்த கூலிக் கறுபதுபொன் வேணுமென்றார் 365
போட்டுவைத்த பொன்னை குபோகாமல்—மீட்டுவர
நாற்பதுபொன் னென்றார் நரசப்பைய் யல்கடனும் 366
நாற்பதுபொன் னுண்டு நமக்கென்றார்—பார்ப்பசுவாய்
வாங்கிப் பணமும் மடிச்சீலைக் குள்ளெடுத்துக் 367
கோங்கு முலையார் கொடுத்துவிட்டார்—சாங்கமாய்
முக்குறுணிப் பாலில் முறட்டெருமைக் கன்பதுபொன் 368
கொக்கரசன் பெட்டைக்கு மானுக்குக்—கைக்கிடுபொன்
மோதிரமும் காதில் முடிச்சளவாய்ப் பொற்கடுக்கன் 369
சாதிருவும் வாங்கித் தரச்சொல்லி—ஆதரவாய்ச்
சொன்னத்துக் கன்பதுபொன் துப்பட்டி கைக்களித்தேன்
சின்னத்துக் கேட்டுப்பொன் செய்யென்றார்-பிள்ளையுமோ
பாக்குக் கிருபதுபொன் பாலுக் கறுபதுபொன் 371
மூக்குத்தி மூக்குத்தி முப்பதுபொன்—தாக்குடனே
பாடகத்துக் கன்பதுபொன் பட்டுக் கறுபதுபொன் 372
சூடகத்துக் கெண்பதுபொன் தொண்ணூறு—நீடுவண்ணச்
சேலைக்கு முப்பதுபொன் சிந்தாக்குக் கன்பதுபொன் 373
னோலைக்குங் கொப்புக்கு மொன்பதுபொன்—சாலவே
நெய்யளந்த நெட்டூர நெட்டைச்சிக் கன்பதுபொன் 374
பைய்யளந்த அல்குற் பதுமினிக்கு—கைய்யளந்த
பொன்வளைக்கும் பீலிக்கும் பொற்குப்பித் தொங்களுக்கும்
முன்வளைக்குங் கூட முகிவதற்கும்—மின்னனைக்கும்
மோரளந்த நாச்சிக்கும் முத்தளந்த பேச்சிக்குந் 376
தாரளந்த கூந்தற் சகியருக்கும்—பாரளந்த

வேங்கட னாருக்கு விளக்கிடவும் வீரனுக்கும் 377
பாங்குடனே பள்ளயத்துப் பால்விலைக்கும்-பூங்கொடியாள்
பொன்னிக் கரங்கேசுத்து பூங்கலியா ணத்துக்கு 378
மன்னிப்பொன் னன்பதும் வாங்கினாள்—பிள்ளையுமோ
சூது விளையாடிச் சொக்கட்டான் சாரியிட்டு 379
மாதுவிளை யாடிமெள்ள வாங்கினாள்—கோதிலாக்
கட்டுவடம் பொன்னரைஞான் கைவந்தி ஆணிமுத்தி 380
லெட்டுவடம் வாங்கென் றியம்பியே—திட்டமுடன்
நாலூறு பொன்னும் நலங்காமல் வாங்கினாள் 381
தேனூறும் செவ்வாய்த் திருவன்னாள்—மானாட்டுத்
தேங்காய்க்குங் கள்ளினுக்கும் சிப்பியனுக் குப்புளிச்ச 382
மாங்காய்க்கு மென்றே வகையாகச்—சாங்கமுடன்
ஆறும் பதினைந்தும் அன்பதுவும் 383
நூறுமிருநூறும் நோகாமல்—தேறுதலாய்ச்
சீராட்டிக் கொண்டாடிச் செந்தே னிதழ்கொடுத்தும் 384
பாராட்டி மெள்ளப் பறித்துவிட்டாள்—தோராயம்
பையிலுள்ள தெல்லாம் பசையறவே கண்டுவிட்டாள் 385
மெய்யிலுள்ள ஊனும் விடக்கண்டாள்—கையிலொரு

36. வஞ்சித்து விரட்ட வழி செய்தமை

காசற்ற வேளைகண்டாள் காரியம்போல் மெள்ளவந்து 386
மாசற்ற கல்வி மறையவனே—ஆசற்ற
பூசத் திருநாட்குப் போகலிலை யோவினித்தான் 387
தேசத்தி லுண்டோ திருக்குடந்தை—காசிக்கே
யொத்தல மல்லவோ ஊர்க்குமேற் காயருகே 388
சுத்த ரிருக்குஞ் சுவாமிமலை—தைத்திருநாள்
சேவித்துப் பஞ்சநதி சேவித்து நல்லூருஞ் 389
சேவித்து மாயூரஞ் சேவித்துத்—தாவித்த
புள்ளூர்சீ காழி புலியூருஞ் சேவித்தால் 390
வெள்ளூ ரிடபத்தான் வீற்றிருக்கு—முள்ளூராங்

காசிக்குப் போய்ப்பரிசுக் காற்றாருடன் கூடலாங் 391
காசிக்கும் போனாற் கதியுண்டே—வேசற்று
வாலிபம் போனால் வருமோ சிவத்தலங்கள் 392
வாலிபத்திற் றேட வழக்கன்றோ—ஞாலத்தில்
வேதியற்குத் தீர்த்தங்கள் வீழ்ந்து படிவதுவே 393
வேதியர்க் குள்ள விருதன்றோ—பூதலத்திற்
சூத்திரர்க்கு மூங்களைப்போற் சூடத் தெரியாதே 394
சூத்திரர்க்கு முகங்களுக்குந் தூரங்காண்—காத்திருந்தாற்
சத்திரத்திற் சோறுண்டு சாறுண்டு சாவடியிற் 395
சித்திரத்தைப் பார்க்கத் தெகுட்டாதே. பத்துப்பேர்
கொண்டாடிக் கொள்ளுங் கதையுங் கவிதைகளுங் 896
கொண்டாடிக் காது குளிரலா—மொண்டியொண்டி
மூலைக்கு ளேயென்ன முட்டையிட்டு வைத்ததுபோற் 397
காலப் பிழையோ கடுங்கேடோ—மேலொக்க
வந்த சதையும் வயிறுங் கரைந்தீரே 398
யந்திசந்தி பொங்கி யலைவீரோ—இந்தத்
தவலையிற் பொங்கல் தழலன்றோ சும்மா 399
அவலை நனைத்து அருந்தக்—கவலையோ
என்னத்துக் கிந்தபா டிங்கிவனுக் கய்யய்யோ 400
அன்னத்துக் குந்தா னலைச்சலோ—அன்னத்தில்
நெய்யோ பருப்போ நெருப்போ புளிச்சாறோ 401
அய்யோவிப் பாவந்தா னாறுமோ—வையகத்திற்
தாயாய்த் தமராய்த் தமையனாய்ப் பெண்டுகளாய்ச் 402
சேயா யொருவருந்தான் தேடாரோ—போயாற
வேறே நிழலிலையோ வீட்டுக்குள் ளேயிருந்தாற் 403
பேறே தமக்குப் பிழைப்பேது—தூறிலித்தான்
வந்தா ளிசாய வருமோ வெனவுரைத்தாள் 404
சந்தோஷ மாயிருந்த தாய்க்கிழவி—யுண்டாமோ

37. தாய்க்கிழவியின் பொய்யோலம்

இப்படியுஞ் சொன்னா லினைசையா னென்றறிந்து 405
மைப்படியுங் கண்ணாள் வகையாகச்—செப்பரிய
தாசம னாயக்கன் றன்கடனுக் கெண்பதுபொன் 406
ராசணை நாயக்கன் ராகவன்—காசிபதி
அய்யன் கடனுக்கும் ஐம்பதுபொன் நாம்கொடுத்து 407
உய்யும் படியுண்டோ ஓசிவனே—தையலுக்கு
மாதமொரு மூன்றாய் வரத்தில்லை வேறினித்தா 408
னோதும் பயிர்ச்செய்வ துண்டோகாண்—ஆதரவாய்
நங்கையைப் பார்த்தல்லோ நாம்பிழைக்க வேண்டியது 409
நங்கையல்லால் வேறேது நந்தமக்குப்—பொங்கலுக்கும்
பானையில்லை வாழைப் பழமில்லைத் தேங்காயு 410
மானதில்லை வேறே யகப்பையில்லைப்—பானைக்குப்
பாலில்லை வெல்லமில்லைப் பன்மஞ்ச ளிஞ்சியில்லை 411
சேலையில்லை யாமென்ன செய்வோங்காண்—ஞாலத்
துடனொத்த பெண்கள்தா னூழலென்று பேசித் 412
திடமற்ற தென்பார் சிரிப்பார்—நடுவொக்கப்
பொல்லாத வம்பனெங்கள் பூங்கொடியைத் தான் கெடுத்தான் 413
கல்லாத மூடன் கசடன்காண்—நல்லாய்கேள்

38. பட்டருக்கு வந்த படுசினம்

என்றா ளெனக்கு மிருவிழிக ளேசிவந்து 414
வென்றாழ் வயிர மனதுற்று—நன்றாகப்
பொல்லாத கோபங்கள் பொங்கிக் குறிப்பாகச் 415
சொல்லாமற் சொன்ன சுனைகேடி—பல்லுப்
பதினாறும் வீழப் பறம்பி முகத்திலுதை 416
மதியாமற் பேச்சோ வுனக்கும்—பிணமாசி

யப்படியு மாச்சோ வுனக்குப்பொன் தட்டோடி 417
(சீச்சீ போ வண்டமுறி யாமதியா தேயென்முன்)
தண்டி மிண்டு பேசத் தகுமோடி— தண்டாம
லொட்டிக் குடிக்கும் லொடலொடத்த வெள்ளாட்டி 418
தெட்டிப் பறித்துச் செரித்ததோ—நட்டணைக
ளப்போது பேச வறியா திருந்ததென்ன 419
இப்போது பேச இருந்தீரோ—அப்போது
கைப்பொருளை வாங்குமட்டும் காரியம்போல் விட்டிருந்து
கைப்பொருள் போனாற்பின் கடத்தவோ—அப்படியோ
சொல்லவு மென்றேன் துணுக்கென் றெழுந்திருந்து 421
பல்லைக் கடித்துப் பழிகாரா—நல்லதடா

39. தாய்க்கிழவியின் சதுரப்பாடு

கேள்வியில்லை யோ கூ கூ கெட்டேன் தங்கச்சி 422
தோழியில்லை யோவெளியிற் சொல்லத்தான் ஏழைகள்தா
ளிவ்வூரிருக்க விசையாதோ அய்யகோ 423
இவ்வூர்விட் டெவ்வூரி லேகுவது—கொவ்வையிதழ்ப்
பொன்னைக் கெடுத்த புரிநூலா வெங்குடியை 424
யின்னங் கெடுக்க விருந்தாயே—என்னவநி
யாயமென்றா லாரு மறியா திருப்பாரோ 425
சாய மெடுப்பிப்பேன் சற்றேபார்—ஞாயமோ
கண்ணைக் கெடுப்பிப்பேன் காதை யறுப்பிப்பேன் 426
பெண்ணைக் கெடுத்த பிழைகேடா—தண்ணமுதைப்
பேசி யணைந்ததுபோற் பித்தாகப் பண்ணுவித்தோ 427
ராசைமருந் திட்டாயே யன்றென்னக்—கூசாமற்
சொல்லி யிரைந்தாள் சுரத்திலோங்கு சித்திர 428
வல்லிதனைப் பெற்றெடுத்த மாமியார்—கொல்லியறு

40. பட்டர் கண்ட கிழட்டு மாமியார்.

துப்பி சுகுமாலி தொல்லுலகில் வந்தமுழு 429
வம்பி பௌவிருந்த மாமியார்—கும்பமுலை
தாங்கி மகளைத் தழுவுதற்குக் கூசாமல் 430
வாங்கி முடியுமந்த மாமியார்—ஓங்கிவளர்
மேருமுலைகள் விழுந்துஞ் சலியாமல் 431
மாரு முலைமறைக்கும் மாமியார்—பார்வையிட்டு
செட்டிக் கடனுக்குத் தீரவகை யில்லாமல் 432
வட்டிக் கழைக்குமந்த மாமியார்—கொட்டிநிதி
தந்தவரை நாளுந் தருபவரைத் தந்தனைய 433
வந்தவரை யாதரிக்கும் மாமியார்—முந்தியுடல்
ஓட்டிவற்ற லாக முலர்ந்தும் பிளகருந்த 434
வட்டுவத்தைக் கைவிடா மாமியார்—நட்டணையா
யெண்டிசையுந் தாய்க்கிழவி யென்னும்பேர் பெற்றிருந்தும்
வெண்டிசைபோற் பாடுமந்த மாமியார்—பெண்டெனவே
தந்தை மயக்குஞ் சகலகுண முங்கூட்டும் 436
வைத்த சரக்கறையாம் மாமியார்—எத்திமெள்ள
நெஞ்சங் குழைந்து நெகிழ்ந்ததுபோற் பாவித்து 437
வஞ்சம் வெளிவிடா மாமியார்—மஞ்சமிஞ்சக்
காசுபண முள்ளவரைக் கைவசங்கள் பண்ணிமற்ற 438
வாசல்வழி போகவொட்டா மாமியார்—தேசுகெட்டுத்
தொங்கிடதோ வென்றுமுலை தொங்கவிழுந் தாலுமொரு
வங்கணத் தைவிடா மாமியார்—பங்கமுறத்
தோள்முதுகு கூனியந்தச் சூத்தொட்டி னாலுமிரு 440
வாள்விழியில் மையெழுதும் மாமியார்—ஆளழகர்
பாழ்த்த பிணத்துக்காய்ப் பற்றிவிழ வுக்கழிந்தால் 441
வாழ்த்திவழி விட்டுவிடும் மாமியார்—கீழ்த்தெருவிற்
சல்லிப் பசங்களுடன் சாராமல் செய்யசித்ர 442
வல்லி துணையடக்கும் மாமியார்—மெல்லியர்போல்

சொம்புத் தனமுஞ் சொகுசும் விடுவாளோ 443
வம்புத் தனமிகுந்த மாமியார்—கொப்பனையார்
சந்துகள் பேசித் தலைவாசல் வந்தவுடன் 444
வந்துமுனம் னிற்குமந்த மாமியார்—செந்தனங்கள்
தாங்கிக் கொடுத்து தளர்ந்தவுடன் கப்பரையை 445
வாங்கிக் கொடுத்தலுப்பும் மாமியார்—தேங்கிளநீர்ச்
சுப்புமுலை யாளிடமாய்க் காசு பறிவதற்கு 446
வைப்பென்னப் பாவிக்கும் மாமியார்—அப்பப்பா
ஆடாது மாடி யலங்கரித்துத் தேவடியார் 447
தேடாது தேடின மொசிமாட்டி—வாடியிளிச்

41. ஊர்ச்சபையோரிடம் வழக்குரைத்தமை

சாவோங் கெடுவோஞ் சலிப்பென்ன வூரவர்முன் 448
போவோம் கணக்கைப் புகலுவோம்—வாவெனவே
பற்றி மடியைப் பதறியிழுத் தாள்சிறிய 449
நெற்றி தனையுடைய நெட்டூரீ—முற்றிலும்போய்

42. தாய்க்கிழவியின் முறையீடு

தானத்தார் கோயிற் றலத்தா ரினத்தார்முன் 450
தேனைத்தான் முன்விட்டுச் சீறியே—தானத்தார்
காலில் விழுந்து கடகடென வேயுருண்டு 451
காலில் விழுந்தெழுந்து கைக்கட்டி—நீயென்ன
ஆண்டவமா ரேகணக்கு மம்பலமு மிங்கிதமும் 452
பூண்டவமே யில்லாதப் புண்ணியரே—நீண்டபல
பட்டடை யாரே பழமை யுடையாரே 453
வெட்டலிடக் கர்த்தராம் வேதியரே—வட்டமுலை
ஆண்டகையு மூங்க ணடுமை யடியேனும் 454
வேண்டிப் புகல்வதொரு விண்ணப்பம்—ஆண்டவரே

கேளுமைய்யா வெங்குடி கெட்டதுவும் பட்டதுவும் 455
ஆளு மகத்தடிமை யல்லவோ—நாளுமென்று
நீரொழுகக் கண்கள் நெடிதுயிர்த்துப் பட்டவர்போல் 456
வாரொழுகுங் கொங்கை மடமானுஞ்—சோரமுது
பஞ்சத்திற் கஞ்சிப் பகிர்ந்து மனைகடோறுங் 457
கஞ்சிக் கலையாமற் காத்ததுவும்—நஞ்சத்தை
யுண்ணும் பரம ருகந்ததிருச் சன்னிதிக்கோர் 458
கண்ணென் றிருக்கக் கமலிதனை—நண்ணியன்று
வைத்ததுவும் பாராமல் வைத்ததுவும் மாமறையோன் 459
வைத்த வழக்கை வரும்பற்றால்—பத்துநாள்
வந்து திரிந்தான் வருவாரைப் போவாரை 460
வந்து திரிய மனம்பொருந்தான்—அந்திசந்தி
வீட்டை விட்டுப் போகான்நம் மின்னனையைப் பாடென்பான் 461
பாட்டை விடவொட்டான் பழிகாரன்—சாட்டையில்லாப்
பம்பரம்போ லாட்டிவிப்பான் பஞ்சமா பாதகங்காண் 462
அம்பலத்தி லேத்தினான் அய்யரே—கும்பமுலை
யிந்த மறையோ னிணங்கியநா ளன்றுமுத 463
யந்திக் குளியை யசந்திட்டாள்—பந்துமுதல்
பாவை கழங்கு பரிந்துவிளை யாடவென்று 464
கோவை இதழாள் குறித்திடாள்—நாவிலுறு
பாட்டை மறந்தாள் பரதவித்த தோடுபுரி 465
யாட்டை மறந்தா ளணியாயம்—வீட்டிலிவன்
பண்ணுகின்ற லூட்டி பலவுண்டு நாங்களினி 466
எண்ணியெண்ணி யேதென் றியம்புவது—நண்ணியென
தங்கம் பிளக்க வடித்தா னுதைத்துவிட்டான் 467
மங்கை தனையு மயிர்பிடித்தான்—சங்கரா
பெற்றவயிறு பெருந்தீக் கொழுந்திடுதே 468
ஒற்றைநரை யிட்டுமிந்த வூழ்வினையேன்—மற்றினித்தா
னெங்கே பறப்போ மெவ்விடத்தே காதலிப்போ 469
மெங்கே யிருப்ப திடங்காட்டீர்—மங்கலரே

43. பட்டர் வழக்குரைத்தமை

யென்னுமுறை கேட்டங்கே யெல்லவருங் கையமர்த்தி 470
யென்னை யழைத்து மியம்பென்றார்—மன்னவரே
ஆதிநாள் வந்தே னரிவைதனக் கன்றுடனே 471
கோதிலாச் செம்பொன் கொடுத்துவிட்டேன்—பாதகிதா
யின்னங் கொடுப்பா னெனவே மருந்திட்டும் 472
என்னைப் பசப்பி யிதமாகப்—பொன்னையெல்லாங்
கொள்ளையிட்டுக் கொண்டாள் குடிகேடி காரியம்போல்
மெள்ளவிட்டுப் போக விடவென்று—தள்ளிவிட்டே
யிங்கிழுத்து வந்தா ளினியுங்கள் சித்தமென்றேன் 474
அங்கவளும் கோம்பி யதிர்ந்தேறித்—தொங்கன்

44. தாய்க்கிழவி பட்டரைப் பழித்துரைத்தது

முகமாயக் கள்ளன் முடிச்சவிழ்க்கி பொல்லாச் 475
செகமாயக் கள்ளன் திருடன்—அகமாய
மென்னமருந் திட்டானோ வெங்கள் குலவிளக்குக்
கன்ன மிறக்கவில்லை அய்யரே—பொன்னை 476
முடிந்த துணியறியான் மூடன் வறடன் 477
விடிந்து திவன்கொடுத்து வேசிக்க—இடிந்துதே
வீடு சுடுமுஞ்சி வெள்ளாட்டிக் கள்ளனிவன் 478
போடு மிவன்பேச்சைப் புண்ணியரே—ஆடவர்கள்
முன்னே சொன்னானே முழுப்பொய்யன் காணய்யா 579
யென்னசொன் னாலு மிவன்பிசினி—மன்னவரே
தூசென்றால் தீயில் துறுத்தாலும் வேகாதோர் 480
காசென்றாற் சாவான் கசுமாவன்—ஆசனை
உடம்புதண்ணீர் கண்டு மொருவருட ழுண்டே 481
கடம்பன் முழுச்சோம்பல் கள்ளன்—தடம்புரியும்

வேசியருங் கண்டு விரும்பி யழைப்பாரோ 482
வேசியர் தாங் கூசாமல் மேவுவரோ—வேசியர்க்குச்
செய்பவ னென்றுந் தெரியாதோ செப்புவதிற் 483
பொய்பவங்க ளில்லாத புண்ணியரே—வையகத்தில்
வாய்க்கரிசி நோண்டி மடிப்பிச்சை வாங்குமிவன் 484
தாய்க்குரியக் கஞ்சிமுதற் றான்வாரான்—வாய்க்கெறுவ
மெத்தச் சபையென்று மெள்ளத்தான் பேசுவனோ 485
தத்தி விழுவான் சமத்தன்போ—லெத்தனைதான்
சொன்னாலுஞ் சற்றே சுரணையுண்டோ பாருங்கோ 486
ளென்னாற் குறைதா னினியுண்டோ—உன்னுமெனப்

45. சபையோர் அறமுரைத்தமை

பேசு முரையைப் பெரிதுகந்து தானீகர் 487
வேசி யலவோ விளையாட்டோ—பேசுமறை
வல்லா யிதுவும் வழக்கோ வழக்கன்று 488
நில்லா யினித்தா னிறுத்துவாய்—சொல்லக்கேள்
மாறு புகலுமந்த வஞ்சியரைப் போவென்றார் 489
பேறு தவத்திற் பெரியோர்கள்—தேறுதலாய்

46. சபையோர் பட்டருக்கு அறிவுரைத்தமை

வேசியர்கள் தம்மிணக்கம் வேண்டா மெனப்புலவோர் 490
பேசு முறையறியப் பெற்றிலையோ—காசிக்குப்
போனாலும் வேசி புணர்ந்தபாவம் போகாதே 491
யானா லினித்தா னறிவையே—ஞானமறை
வித்தகனே தேடியுண்ணும் வேசியர்கள் தொட்டபயம் 492
பத்தினி மாதா பரிப்பரோ—சுத்தனெனுஞ்

சாரங்கன் கைகால் தறித்ததுவும் மங்கொருத்தி 493
வாரங்கக் கொங்கை வருத்தன்றோ—சீரங்க
விப்பிரநா ராயணன்செய் மெய்த்தவத்தை வீழ்த்ததுவு 494
மொப்பிலா வேசி யொருத்தியன்றோ—செப்பரிய
சொந்தி யரசன் குடிகெட்டுப் போனதுவும் 495
முந்தி யொருத்தி முயக்கன்றோ—கொந்தருணை
யன்னகரில் வந்த அருணகிரி நாதரும் 496
சொன்ன திருப்புகழிற் சொல்லலையோ—பன்னுதமிழ்
சுந்தரனைக் கொண்டரனைத் தூதுநடப் பித்ததுவும் 497
பைந்தொடி யான பரவையன்றோ—விந்தைபெறும்
புட்ப வரசன் புதுநகையை மாற்றியதும் 498
நுட்ப விடையார்தம் னோவன்றோ—திட்பமுடன்
கோதிலாக் கோவலனைக் கொன்றதுவும் வென்றதுவு 490
மாதவி யாலலவோ மாமறையோய்—மேதருவாய்
ஓய்ந்துகலி சொல்லாத வோர்காளி தாசனுயிர் 500
மாய்ந்ததுவும் வேசி மயக்கன்றோ—வாய்ந்தமுடிப்
பூமன்னர் கோடி புலியிழந்து கட்டழிந்து 501
சேம நிதியிழந்த தெவ்வகைகாண்—ராமனே
யெண்ணி லுலகத் தியற்கையெலாம் வேசியர்தம் 502
கண்ணியிற் சிக்கக் கடனன்றோ—நண்ணுமிளங்
காமுகர்க்கு நோவு கருக்குவதும் காமுகரைக் 503
காமன் வருத்துங் கடும்பிழையுந்—தேமல்முலை
வேசியரா லிந்த விதிவசமே யல்லாமல் 504
வேசியல்லால் வேறே விலக்குண்டோ—தேசிகனே
கத்துங் கடலிற் கரைத்த பெருங்காயம் 505
மெத்த விழலுக் கிரைத்தநீர்—புத்தியே
கட்டிவைத்த சேலைவளர் காட்டுக் கெறித்தநிலா 506
செட்டிகையில் வைத்த சிறுதெட்டு—முட்டமுட்டப்

பூணைக் களித்த புதுப்பால் புகைந்தெழுந்த 507
கானக் கமரிற் கவிழ்ந்தபால்— ஆணைகவி
யுண்டகதை யாற்றி லுரைத்துக் கரைத்தபுளி 508
பண்டுவெயி லிட்ட பசுமஞ்சள்—மிண்டருடல்
கொத்து மிரும்பு குடித்தநீர் அன்புகெடச் 509
செத்தவர்க்குச் செய்த சிறுநன்றி—'பித்தனையும்
வாய்ந்தபல னென்று வழங்கினா லிங்கவர்க்கும் 510
ஈய்ந்தபொரு ளெய்துமென வெண்ணலாம்—ஆய்ந்தவரே
பாரக் கிணற்றிலிட்ட பாறையெனப் போட்டுவிட்டும் 511
மூரைக் கருதி யுகந்துநட விரென்றார்—அன்னவர்கள்

47. பட்டர் மனந்தெளிந்தமையை விறலியிடம் கூறல்

சொன்னபுத்தி கேட்டநா ளன்றுமுத லின்றளவு 512
மின்னமன துற்றதுகா ணேந்திழையே—பின்னனுப்பிக்
கொண்டு மனத்தவளைக் கொள்ளாம லேநடந்து 513
வண்டுலவு வாஞ்சியத்தில் வைகியே—கண்டதெலாம்

48. தலங்களை நாடித் தரிசித்தமைக் கூறல்

எண்ணிப் பலவு மிருந்துகெடு மூச்செறிந்து 514
நண்ணித் தலங்கள் தொழநாடி—விண்ணவரென்
காசியிம கேதாரங் காளத்தி காஞ்சிபுரந் 515
தேசு திருவோத்தூர் தென்காலை—பேசரிய
சேடகிரி தில்லை செகனாதந் தென்னருணை 516
பாடகத் தோடுதிருப் பாதிரியூர்—நாடரிய
நன்னு திருவதிகை நாரசிங்கம கங்கபுரம் 517
அண்ணல் திருத்தணி யாலங்காடு—கண்ணபுரங்
காழி கடலூர் கலசை திரு வையாறு 518
பாழி திருப்பனைந்தாள் பன்றியூர்—சோழபுரஞ்

சேறை திருப்புகலூர் தென்னாகை கீழ்வேளூர் 519
ஆறையம்பல் பூந்தோட்டம் ஆனைக்கா—சேறுவயற்
கோட்டூர் திருக்களர்பூங் கும்பகோணந் துறைசை 520
காட்டூர்க் கடுத்த காவிரம்—நாட்டிலுயர்
வேதா ரணியம் வீசலூ ரிடைமருதூர் 521
போதா புரங்கண்டி பூந்துருத்தி—காதுரும்
நள்ளா றிலுப்பையூர் நாவலூர் மாயூரம் 522
புள்ளூர் குடவாசல் புன்கூரும்—வெள்ளலுரை
பந்தண நல்லூர் பனையூர் திருமருகல் 423
சந்தலகை மேலத் தவத்துறையு—மிந்ரகிரி
யீங்கோய் மலைபழநி யெட்டியளூர் வேதிகுடி 524
தேங்கூர் சிராப்பள்ளி திண்டுக்கல்—வேங்கைபுரம்
மோகாம் பிகைசெந்தில் முந்து பரங்குன்றம் 525
வாகான ரெத்னகிரி மாமதுரை—நாகமலை
சிவிலி புத்தூர் செழிய சொனார்த்தனமுங் 526
கோவல் குறும்பலகாக் குற்றாலம்—பாவவிநா
சஞ்சங் கரனார் தனிக்கோயில் கோடிக்கோ 527
டஞ்சங் குலவுதிரு வாங்கோடு—விஞ்சுநவ
தாளங்கள் பார்த்துத் தனுக்கோடி முழ்கியபின் 528
தானங்கள் பண்ணித் தவஞ்செய்து—ஞானங்கள்
வந்து பணிந்து வரராம லிங்கபதஞ் 529
சிந்தையி னுள்ளே தெரிசித்து—வந்ததொரு
கங்கைநீ ராடி கனிந்துவிடை கொண்டுவளம் 530
பொங்குபுசழ் சீராசைப் பொன்னகரி—லங்குவந்து
மாதுதிருச் செங்கமல வல்லிதனைச் சேவித்துச் 531
சீதரனைத் தென்ராசைச் சேவகனைப்—பூதலத்தை
யுண்டுமிழ்ந்த தூய வுதரப் பெருமானைச் 532
செண்டழக ளான திருமாலை—புண்டரீகக்
கண்ணனைக் கண்ணபுரக் காவலனைக் காயாம்பூ 533
வண்ணனைப் பண்ணையெம் மாயவனை—நன்னுதுள

பத்தா ரினானைப் பரனைப் பராபரனைச் 534
சத்தா வரணத்தோர் சம்பிரனைப்—பத்தாழ்வார்
பாடப் பரகதியைப் பாவித்த பாலகனைத் 535
தேடக் கிடையாத சிற்பரனைப்—பாடுதமிழ்ப்
பாவலர் போற்றும் பதக்கான் பாவரசு 536
தேவனையே கண்டு தெரிசித்தேன் பாவமெல்லாம்
போக்கினேன் மெள்ளப் புறப்பட்டேன் புண்ணியங்கள் 537
தேக்கினேன் கண்டாய்செந் தேன்மொழியே—நீக்கமற

49. இராசை—செண்டலங்கார வள்ளல்

மின்னுங் கனராசை வீதிவரும் போதொருத்தர் 538
அன்னதரு வென்ன அவணங்கிருந்தான்—மன்னுமணிக்
கொத்தலரும் முல்லைக் குலவுந் திருமார்பன் 539
சித்தவே ளன்னதொரு தியாகப்பன்—புத்திரவேள்
வீராதி வீரன் விசையன் சுகசரணன் 540
மாராபி ராமன் மகராசன்—சீராசை
தன்னில் வருபவர்க்குத் தாணுவாய்ச் சாந்ததமாய் 541
பொன்னைப் புதையாத புண்ணியனாய்ப்—பன்னுதமிழ்ப்
பாவலர்க்கும் யார்க்கும் பசித்தோர்க்கும் பாராளுங் 542
காவலர்க்குஞ் சொல்லரிய கற்பகமாய்—மூவுலகுஞ்
சென்று பரிமளிக்குஞ் சீர்த்திபுள்ள பார்த்திபனாய்த் 543
துன்றுபுகழ் பெற்ற துரைராசன்—என்றுவளர்

50. தஞ்சையரசுக்கு அட்டவணை

தன்மதுரை தஞ்சைச் சகசிமா ராசனுக்குப் 544
பொன்முதிர வேண்டிப் புதுக்கியே—நன்மணியத்
திட்டமிட்டு நாளுந் திகழ்நல் லவன்வாசல் 545
அட்டவணை யாஞ்செண்டலங்காரன்—வட்டமுகங்

51. *அட்டவணை-சென்டலங்கார வள்ளலைப் பட்டர் கண்டு வணங்கல்

கண்டு துதித் தேத்தினேன் கண்குளிரப் பார்த்துமகிழ் 546
கொண்டுவா வென்றழைத்துக் குப்பிட்டான்-பண்டை நாள்
மெத்தப் பழக்கமென வேண்டிவந்த காரியங்கள் 547
சித்தத்தில் மெள்ளத் தெரிந்துகொண்டான்—பக்தியுடன்
காசியிற் கெங்கா சலமும் கரத்தளித்தேன் 548
ஆசையுடன் வாங்கி யகமகிழ்ந்தான்—நேசமுடன்
தன்மிடியைத் தானறியாத் தத்துவன் போல்வலிய 549
என்மிடியை யன்றே யியம்பினான்—பொன்முடிந்து

52. வள்ளல், பட்டரை ஆதரித்துப் பரிசு நல்குதல்.

தந்தான் சரப்பளியுந் தந்தான் சயிக்கமொன்று 550
தந்தா னினியென்ன தையலே—பிந்தியுமே
ஆதரித்தான் வேண்டியதெல் லாங்கொடுத்தான்
அன்பாகப் 551
பூதலத்தி லுண்டோ அப் புண்ணியன்போல்—மாதரசே

53. துன்பந்தீர்ந்த பட்டர் விறலியைத் தூதுவிடல்

பட்ட துயரம் பதைத்த துயரமெல்லாம் 552
கட்டழகி நின்முகத்தைக் கண்டவுடன்—விட்டோடிப்
போச்சே இனியுனது புண்ணியத்தால் நன்மைகளு 553
மாச்சே இளையா ளகத்திற்போய்—ஆச்சரிய
மெல்லாம் புகன்றுதா தென்னவிணங் கும்படிக்சே 554
நல்லாய் நடப்பதுவே நன்றியெனச்—சொல்லலுமே

---

* அட்டவணை (அஷ்டவணை) — அரசுக்குரிய, இறை, வரி, கடமை, 'குடிக்கூலி வாரம்' சுங்கம், ஊர்க்காவல், மாவடை, மரவடை ஆகிய எட்டு வரிகளுக்கும் உரிய கணக்கதிகாரி.

54. விறலி தூது சென்றுரைத்தமை

மாது விறலி மகிழ்ந்துமட வார்கள்முன் 555
ஓதுமங்க ளந்தானொன் றுண்டென்ன—சேதுமுதற்
காசியினும் போனவுங்கள் காதலர்வந் தாரெனவும் 556
பேசலுமே மாதங்கைப் பெரிதுவந்து—வேசிவிற

55. விறலி பெற்ற பரிசு

விக்குப் பணியுமுகி லிந்திர நீ லத்துகிலும் 557
செக்கச் சிவந்ததொரு செம்பட்டும்—தக்கசெம்பொற்
றோடுஞ் சரப்பளியுஞ் சுட்டியுந் தாழ்வடமும் 558
பாடும் விறலி பரிசுபெற—நீடளித்துச்

56. வாகுபட்டர் மனைவியருடன் கூடி மகிழ்தல்

சந்தோஷ மாகத் தமது மணவாளர் 559
செந்தா மரைத்தாளைச் சேவித்து—முந்தியினும்
பண்புங் குணமும் பரிவுமிக வுண்டாகி 560
எண்பட்ட துன்பத் திளைப்பாற—கண்பத்து
நூறுடையான் போலும் நுவ்விந் திரைபோலுந் 561
நீறுடையான் பார்பதியி னேர்போலும்—ஆறு
முகத்தானைப் போலும் முனிந்தவள்ளி போலும் 562
செகத்தான் திருவெனவுஞ் சேர்ந்து—மகத்துவமாய்க்
காலை முழுக்குங் கடும்பகல் ராமுழுக்கும் 563
மாலை முழுக்கும் வழுவாமல்—சீலனெனக்
கற்றுப் படித்துக் கரைகண்டு பூவுலகிற் 564
பெற்றுப் பெருகிப் பெரிதுசுந்து—நற்றவங்கள்

57. வள்ளல் செண்டலங்காரனைப் புலவர் வாழ்த்தியது

செய்யும் பொழுதெங்கள் செண்டலங்காரப்பெருமாள் 565
வையகத்தி லென்னாளும் வாழியென—மெய்யுரைத்து
அன்புற் றிருந்ததொரு வள்ள லருளாலே 566
இன்புற் றிருந்தா ரினம்.

வெண்பா

செந்தமிழ்க்கு நாளுந் திகழ்த்தியாக பூபனருள்
ஐந்தருவை நேர்செண் டலங்காரா—விந்தையொடு
முன்னானைக் காத்த முகுந்த னருளதனா
லென்னாளும் வாழ்ந்துண் டிரு.

செண்டலங்காரன் வாழி! வாழி!!

ஆறுமுகத்தையன் றுணை.

ஆறுமுகம்